ஆகஸ்டு 2005

www.padippakam.com

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்

விஜயகாந்தின் அரசியல்:
கவர்ச்சி பாதி
காவி பாதி
கருப்புப்பணம் மீதி



அணுசக்தி ஒப்பந்தம்:

## அமெரிக்க அடிமை 'அணு'மன் மோகன்சிங்!

படிப்பகம்

www.padippakam.com

### மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப் போராடிய பு.மா.இ.மு. சென்னை மாவட்டச் செயலாளர் **தோழர் கார்த்திகேயனைத்** தாக்கிய பச்சையப்பன் கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி

# கண்டன ஆர்ப்பாட்டம்

தமிழகத்திலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை-அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களில் பெரும்பாலோர் சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பின்தங்கிய தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மாணவர்கள்தான். இவர்கள் தங்களின் உயர்கல்விச் செலவுகளை ஈடுகட்டுவதற்காக அரசிடம் போராடிப் பெற்ற சலுகைதான் கல்வி உதவித் தொகை (ஸ்காலர்ஷிப்) ஆகும். அரசு அளிக்கும் இந்த உதவித் தொகை கல்வியாண்டின் தொடக்கத்திலேயே மாணவர்களுக்கு வழங்கப்பட்டால்தான், அவர்களால் தமது கல்விச் செலவுகளை ஈடுசெய்ய முடியும். ஆனால், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சென்ற (2004-05) ஆண்டிற்கான உதவித் தொகை இந்த ஆண்டு ஜூலை வரை வழங்கப்படவில்லை.

மாணவர்கள் திரண்டு முதல்வரிடம் உதவித் தொகை கேட்கும் போதெல்லாம் அரசிடமிருந்து இன்னும் பணம் வரவில்லை என்று அறிவித்து வந்தார், அவர். உண்மையில் கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதமே இந்தத் தொகை கல்லூரி நிர்வாகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதை முதல்வர், சில பேராசிரியர்கள், அலுவலர்கள் அடங்கிய கூட்டுக் களவாணிக் கும்பல் வங்கியில் வைப்பு நிதியாகப் போட்டு, அதில் வரும் வட்டியை அனுபவித்துக் கொண்டிருந்தது. உதவித் தொகையைத் தமது வங்கிக் கணக்கில் சேர்த்து வட்டியைப் பெருக்கிக் கொள்வதற்காக, இந்த உதவித் தொகையை மாணவர்களுக்குக் காலந்தாழ்த்திக் கொடுப்பது, போலி ஆவணங்கள் தயார் செய்து மொத்தப் பணத்தையும் சுருட்டிக் கொள்வது முதலான மோசடிகளை எதிர்த்தும், எல்லோருக்கும் கல்வி உதவித் தொகையினை உடனடியாக வழங்கக் கோரியும் போராட்டத்துக்கு மாணவர்களை அணி திரட்டினார், சென்னை மாவட்ட பு.மா.இ.மு. செயலாளரான தோழர் கார்த்திகேயன்.

இதனால் ஆத்திரமடைந்த கல்லூரி முதல்வர் ராஜேந்திரன், துணை முதல்வர் சாந்தாராம், பேராசிரியர்கள் சாய்ராம், ரவிக்குமார் ஆகியோர் 12.7.05 அன்று மாணவர்களிடம் கோரிக்கை மனுவில் கையெழுத்து வாங்கிக் கொண்டிருந்த தோழர் கார்த்திகேயனைப் பிடித்து இழுத்துச் சென்று, தனியறையில் அடைத்து, ஆடைகளைக் கிழித்து, ஆபாசமாக ஏசிக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். அவரிடமிருந்து செல்போன், கடிகாரம், பணம் முதலானவற்றைப் பறித்துக் கொண்டு, கல்லூரிக்குள் கலாட்டா செய்து தங்களைத் தாக்க வந்ததாகப் பொய்ப் புகார் கொடுத்து போலீசிடம் ஒப்படைத்தனர். இதனடிப்படையில் பொய் வழக்கு தொடுத்த போலீசார், தோழரைச் சிறையிலடைத்தனர்.

மாணவர்களின் நியாயவுரிமைக்காகப் போராடிய தோழரை ரௌடிகளைப் போலத் தாக்கிய சாந்தாராம், சாய்ராம், ரவிக்குமார் ஆகியோர் பார்ப்பன பயங்கரவாத அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.-இன் உறுப்பினர்கள். ஆர்.எஸ்.எஸ்.-இன் மாணவர் அமைப்பான ஏ.பி.வி.பி.-யின் மாநில மாநாட்டை பச்சையப்பன் கல்லூரி வளாகத்திலேயே நடத்த ஏற்பாடு செய்த பொழுது, பு.மா.இ.மு.; எஸ்.எஃப்.ஐ. ஆகிய மாணவர் அமைப்புகள் இதற்குக் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தன. ஆகவே, பு.மா.இ.மு. தோழர் கார்த்திகேயன் மீது ஆத்திரப்பட்டதற்கும், மூர்க்கத்தனமாகத் தாக்கியதற்கும் இதுவும் முக்கியக் காரணமாகும்.

மறுநாள், 13.7.05 அன்று தோழர் கார்த்திகேயன் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் முடக்கி வைக்கப்பட்டுள்ள உதவித் தொகையை உடனடியாக வழங்கக் கோரியும் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் வகுப்பு புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பீதியடைந்த நிர்வாகம் அன்றைய தினமே, உடனடியாக உதவித் தொகை வழங்கியது. வங்கியில் வைத்து வட்டியை சுருட்டிக் கொண்டு இத்தனை நாளும் ஏய்த்து வந்த முதல்வர் கும்பலின் மோசடியை இது உறுதிப்படுத்தியது.

தோழர் கார்த்திகேயன் தாக்கப்பட்டது விதிவிலக்கான விவகாரமல்ல; கல்வி நிறுவனங்களின் நிர்வாக முறையும் பேராசிரியர்களின் மன இயல்பும் எவ்வாறு ஜனநாயக விரோதமாக, பாசிசமயமாக மாறிக் கொண்டிருக்கிறது என்பதற்கு இத்தாக்குதல் இன்னும் ஒரு சான்று; பல ஜனநாயகவாதிகளையும் மொழிப்போர் வீரர்களையும் கொடுத்த பச்சையப்பன் கல்லூரி இன்று ஆர்.எஸ்.எஸ். கூடாரமாக மாறிக் கொண்டிருப்பதற்கான நிரூபணம். இப்பாசிச - ஜனநாயக விரோதப் போக்கைக் கண்டித்தும் குற்றவாளிகளான முதல்வர் மற்றும் பேராசிரியர்களைக் கைது செய்து பணிநீக்கம் செய்யக் கோரியும் தமிழகம் எங்கும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் கண்டன ஆர்ப்பாட்டங்களை பு.மா.இ.மு. நடத்தி வருகிறது.

தஞ்சையில், 18.7.05 அன்று ரயிலடி அருகேயும், 20.7.05 அன்று சென்னையில் வள்ளுவர் கோட்டம் அருகிலும் திருச்சியில் 22.7.05 அன்று அண்ணாசிலை அருகிலும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. திரளாக மாணவர்களும் பெற்றோர்களும் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டங்களில் கல்லூரி முன்னாள் முதல்வர்கள், வழக்குரைஞர்கள், மாணவர் அமைப்புகளின் பிரதிநிதிகள், தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளின் பிரமுகர்கள் ஆகியோர் பங்கேற்று கண்டன உரையாற்றினர். பு.மா.இ.மு.வின் நியாயமான போராட்டம் மாணவர்கள் மற்றும் ஜனநாயக சக்திகளிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

— புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி, தமிழ்நாடு.

தஞ்சையில் நடந்த ஆர்ப்பாட்டம்.






படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 20**

**இதழ் 10**

**ஆகஸ்டு 2005**

***உள்நாடு***
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

***வெளிநாடுகள்***
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

***படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்***

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**


## *குர்கான்:*

# மறுகாலனியாக்கத்தின் ஜாலியன்வாலா பாக்?

குர்கானில் ஹோண்டா நிறுவனத் தொழிலாளர்கள் மீது அரியானா போலீசார் நடத்தியுள்ள தாக்குதலுக்கு விவரணை தேவையில்லை. இராக் மக்கள் மீது அமெரிக்க இராணுவமும் பாலஸ்தீன மக்கள் மீது இசுரேல் இராணுவமும் நடத்திவரும் தாக்குதல்களில் வெளிப்படும் கொலைவெறியை இந்தத் தாக்குதலிலும் நாம் காண்கிறோம். தடிக் கம்பிற்குப் பதிலாக போலீசின் கையில் துப்பாக்கிகள் மட்டும் இருந்திருக்குமானால், இரண்டாவது ஜாலியன்வாலா பாக்கை அந்த மண் இந்தியாவிற்கு வழங்கியிருக்கும்.

700 தொழிலாளர்களுக்கு இரத்தக் காயம்; மருத்துவமனையில் திரண்ட தொழிலாளர்களின் குடும்பத்தினரும் மூர்க்கமாகத் தாக்கப்பட்டிருக்கின்றனர். காணாமல் போன தொழிலாளர்களின் கதியோ என்னவென்றே தெரியவில்லை. ''அவர்கள் வீட்டுக்குப் போயிருப்பார்கள்'' என்று திமிராகப் பதில் சொல்கிறது போலீசு. போலீசின் கொலை வெறியை அம்பலப்படுத்தி தொலைக்காட்சிகளுக்குப் பேட்டி கொடுத்த ராஜேந்திர பதக் எனும் தொழிலாளர்களின் வழக்குரைஞரை இரண்டு நாட்கள் சித்திரவதை செய்து, பிறகு அவர் மீது கொலை முயற்சி வழக்கும் போட்டிருக்கிறது போலீசு. பொய் வழக்கை எதிர்த்து வேலைநிறுத்தம் செய்கிறார்கள் வழக்குரைஞர்கள்; ''இதற்கெல்லாம் நான் பயப்படமாட்டேன்'' என்று சவால் விட்டு ராஜேந்திர பதக்கிற்குப் பிணையை மறுத்துச் சிறையில் தள்ள உத்தரவிடுகிறார் நீதிபதி. இந்தக் கொலைவெறியாட்டத்தைப் படம் பிடித்த தொலைக்காட்சி நிருபர்கள் போலீசால் தாக்கப்படுகிறார்கள்; 28-ஆம் தேதியன்று அறிவிக்கப்பட்ட குர்கான் பந்த்-ஐ முறியடிக்க போலீசே முன்நின்று வேலை செய்கிறது. போராட்டம், தாக்குதல், கலவரம், கண்ணீர், கடையடைப்பு, நாடாளுமன்ற அமளி, கட்சித் தலைவர்களின் கண்டனங்கள்.... அனைத்திற்குப் பிறகும் ''வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் சேர்த்துக் கொள்ள முடியாது'' என்று திமிராக அறிவித்திருக்கிறது, ஹோண்டா நிர்வாகம்.

இனி என்ன? தொழிலாளி வர்க்கத்திற்கேயுரிய போர்க்குணத்துடன், போலீசு என்றழைக்கப்படும் அந்தக் கூலிப்படையைத் திருப்பித் தாக்கிய ஹோண்டா தொழிலாளர்களின் வீரமும் தனியொரு பெண்ணாக நின்று போலீசின் அடிமைத் தொப்பியையும், ஆதிக்கத் தடிக்கம்பையும் பிடுங்கிக் கொண்டு அவர்களை ஓட ஓட விரட்டிய வீரமதியின் வீரமும் நம் கண்ணில் நிற்கிறது. போலீசென்னும் கூலிப்படை ஒரு கோழைப்படைதான் என்ற உண்மையை, இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் நாடி நரம்புகளிலெல்லாம் உணர்ச்சியாகப் பாய்ச்சியிருக்கிறது இந்தப் போராட்டம். அடிமைத்தனத்தையும் இயலாமையையும் இறைஞ்சுதலையுமே விடுதலையின் பாதையாக இருளில் தடுமாறி வந்த இந்திய விடுதலை இயக்கத்திற்கு பகத் சிங் என்றொரு ஒளிக்கீற்றை ஜாலியன்வாலா பாக் - வழங்கியதைப் போல, குர்கான் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் கண்ணைத் திறக்க வேண்டும். தொழிற்சங்கவாதமும் சமரசவாதமும் தன்னிடம் தோற்றுவித்திருக்கும் அறிதுயில்தான், தனது சகோதரர்கள் அநாதைகளைப் போல வேட்டையாடப்படுவதற்குக் காரணம் என்பதைத் தொழிலாளி வர்க்கம் உணர வேண்டும். போலீசின் மீது சோனியாகாந்தி தெரிவித்திருக்கும் கண்டனமும், சில அதிகாரிகளின் இடமாற்றமும், நீதி விசாரணையும், நிவாரணத் தொகையும் இந்த வன்முறையின் உண்மையான உள்ளடக்கத்தை மறைப்பதற்காகவே நடத்தப்படும் நாடகங்கள்.

பன்னாட்டு நிறுவனங்களின் மனங்கவர்ந்த மையமான குர்கானின் எந்தத் தொழிற்சாலையிலும் தொழிற்சங்கம் கிடையாது. தொழிலாளர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கிடையாது. குறைந்தபட்ச ஊதியம் குறித்த வரைமுறைகள் கிடையாது. இரத்தம் சொட்டச் சொட்டத் தாக்கப்பட்டுச் செய்வதறியாமல் திகைத்து நிற்கும் ஹோண்டா தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். தமிழகம், கேரளா, கர்நாடகா, ஒரிசா, மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்து பிழைப்பு தேடிச் சென்ற இந்தத் தொழிலாளர்களின் அதிகபட்ச ஊதியமே 5000 ரூபாய்தான் என்கிறது ''தினமணி''. இந்த ஊதியத்திலும் கால் பகுதியை வைப்புத் தொகையாக நிர்வாகமே பிடித்து வைத்துக் கொள்கிறது என்றும் பெண் தொழிலாளர்கள் வசைச் சொற்களால் இழிவுபடுத்தப்படுகின்றனர் என்றும் குற்றம் சாட்டுகிறார் 'மார்க்சிஸ்டு' கட்சியின் மாதர் சங்கத் தலைவர்.

தொடர்ச்சி 26-ஆம் பக்கம்

www.padippakam.com

## அமெரிக்க—இந்திய இராணுவ—அணுசக்தி ஒப்பந்தங்கள்:

# அமெரிக்க அடிமைத்தனத்தில் புதிய அத்தியாயம்

பிரதமர் மன்மோகன் சிங், அரசு முறைப் பயணமாக அமெரிக்கா செல்வதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக, இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையே இராணுவ ஒப்பந்தமொன்று கையெழுத்தானது; அவர் அமெரிக்கா சென்றிருந்த பொழுது, அணு சக்தி ஒத்துழைப்பு குறித்த மற்றொரு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே எத்தனையோ ஒப்பந்தங்கள் போடப்பட்டிருந்தாலும், அவற்றையெல்லாம் விட, தற்பொழுது கையெழுத்தாகியுள்ள இவ்விரு ஒப்பந்தங்களை வரலாற்றுத் திருப்பம் என்றும்; குறிப்பாக, அணுசக்தி குறித்த ஒப்பந்தம் இந்தியாவை வல்லரசாக்க உதவும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அமெரிக்க ஆதரவாளர்கள் உற்சாகம் பீறிடக் குறிப்பிடுகிறார்கள்.

இராணுவ ஒப்பந்தத்தின்படி, அமெரிக்கா மற்றும் இந்தியாவின் நலன்களுக்கு ஏற்ற விதத்தில், இரு நாட்டுப் படைகளும் கூட்டாக இணைந்து, உலகின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடும். இரண்டாவதாக, ஏவுகணைத் தாக்குதல்களில் இருந்து தற்காத்துக் கொள்ளும் திட்டத்தில் இரு நாடுகளும் ஒத்துழைக்கும். மூன்றாவதாக, தரை, கடல், வான் வழியாக பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்கள் கடத்தப்படுவதைத் தடுக்க, இரு நாட்டுப் படைகளும் கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும். நான்காவதாக, இரு நாடுகளும் இணைந்து ஆயுதம் மற்றும் இராணுவத் தளவாட உற்பத்தியில் ஈடுபடும்.

அணு சக்தி தொடர்பாக போடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி, சமூகப் பயன்பாட்டுக்காக (மின்சாரம் உற்பத்தி செய்வது) இயக்கப்படும் அணு உலைகள்; இராணுவப் பயன்பாட்டுக்காக (அணுகுண்டு தயாரிப்பது) இயக்கப்படும் அணு உலைகள் என இந்தியா தனது அணு உலைகளை இரண்டாகப் பிரிக்க வேண்டும். சமூகப் பயன்பாட்டுக்காக இயக்கப்படும் அணு உலைகளை சர்வதேச அணுசக்தி கழகத்தின் கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டும்; புதிதாக அணுகுண்டுச் சோதனைகள் நடத்தக் கூடாது; அணு ஆயுத நாடுகள் உருவாக்கியுள்ள, அணுகுண்டு தயாரிப்பதற்குப் பயன்படும் வேதிப் பொருட்களை ஏற்றுமதி செய்வதைக் கட்டுப்படுத்தும் சட்டத்திற்கு கட்டுப்பட்டு இந்தியா நடக்க வேண்டும்; அணு ஆயுத நாடுகள் போட்டுள்ள ஏவுகணை சோதனை கட்டுப்பாடு குறித்த சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டு, இந்தியா நடக்க வேண்டும்.

இந்த இரண்டு ஒப்பந்தங்களையும், சாதாரண வர்த்தக ஒப்பந்தம் போல பார்க்க முடியாது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கடைக்கண் பார்வைக்காக, இந்தியா, ''இதுதான் எங்களது அணுக் கொள்ளை''; ''இது தான் எங்களது இராணுவக் கொள்கை'' என்று கூறி வந்ததை தடாலடியாக மாற்றிக் கொண்டு விட்டது. சொல்லப் போனால், அமெரிக்காவின் மேலாதிக்க வெறிக்கு இந்தியாவைப் பலிகடா வாக்கும் அடிமைச் சாசனத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறது, மன்மோகன் சிங் கும்பல்.

•••

இந்தியாவிற்குப் போலி சுதந்திரம் கிடைத்த நாளில் இருந்தே, ''அணிசேராமை எங்களது வெளியுறவுக் கொள்கை'' என வாய்ச்சவடால் அடித்து வருவது இந்தியாவின் வாடிக்கையாக இருந்து வருகிறது. ஆனால், இப்பொழுதோ, இந்த வாய்ச்சவடால்களைக் கூட வெளிப்படையாக மூட்டை கட்டி வைத்துவிட்டு, அமெரிக்காவின் நாடு பிடிக்கும் ஆக்கிரமிப்பு போர்களில் இந்திய இராணுவத்தைக் கூலிப் படையாக அனுப்பும் உத்தரவாதத்தோடு இராணுவ ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

இந்திராகாந்தி ஆட்சியின் பொழுது, சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தோடு, இந்தியா இராணுவ ஒப்பந்தமொன்றைப் போட்டுக் கொண்டது. (இந்தியாவின் அணிசேராக் கொள்கை அப்பொழுதே பல்லைக் காட்டிவிட்டது தனிக்கதை) அந்த இராணுவ ஒப்பந்தத்தைவிட, தற்பொழுது அமெரிக்க மேலாதிக்க வல்லரசோடு போடப்பட்டுள்ள இராணுவ ஒப்பந்தம் மிகவும் அபாயகரமானது. ஏனென்றால், இந்திய - சோவியத் ஒப்பந்தத்தில் இந்திய இராணுவத்தைக் கூலிப்படையாக பயன்படுத்தும் விதிகள் இருந்ததில்லை.

இந்திய இராணுவத்தைக் கூலிப் படையாகப் பயன்படுத்துவது என்ற அம்சம் இந்த ஒப்பந்தத்தில் பச்சையாகச் சொல்லப்படவில்லை; ஆனால், அது, ''இந்திய - அமெரிக்க நலன்

**அமெரிக்க அதிபர் மாளிகையில் அளிக்கப்பட்ட வரவேற்பை ஏற்றுக் கொள்ளும் பிரதமர் மன்மோகன் சிங்; (உடனிருப்பவர்கள் வலமிருந்து) அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், அவரது மனைவி லாரா புஷ்; மற்றும் மன்மோகன் சிங்கின் மனைவி குர்சரண் கௌர்.**




படிப்பகம்

www.padippakam.com

கள் ஒத்துப் போனால்; ''ஜனநாயகத்தைப் பரப்புவது''; ''பன்னாட்டு நடவடிக்கை'' என்ற வார்த்தைகளின் பின்னே ஒளித்து வைக்கப்பட்டுள்ளது.

ஒரு ஆக்கிரமிப்புப் போரின் மூலமாகவோ அல்லது அதிரடி அரண்மனைப் புரட்சிகளின் மூலமாகவோ தனது கைக்கூலிகளைப் பதவிக்குக் கொண்டு வருவது தான் ''ஜனநாயகத்தைப் பரப்பும்'' அமெரிக்க பாணி. ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் ஜனநாயகத்தைக் கொண்டு வருவதற்காக அமெரிக்கா நடத்தி வரும் அட்டூழியங்களை அதற்குள்ளாகவா மறந்துவிட முடியும்?



கடந்த ஆண்டு மிசோரம் மாநிலத்தில் அமெரிக்காவும், இந்தியாவும் இணைந்து மேற்கொண்ட இராணுவப் பயிற்சியில் கலந்து கொண்ட இரு நாடுகளையும் சேர்ந்த இராணுவச் சிப்பாய்கள்.

அமெரிக்க இராணுவத்துக்கு ஆலோசகராகச் செயல்படும் ஐ.ஏ.டி.ஏ.சி., என்ற அமைப்பு, ''ஆசிய கண்டத்தில் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது; தீவிரவாதிகளைத் தேடுவது; பணயக் கைதிகளைக் காப்பாற்றுவது; அமெரிக்காவின் உயர் தொழில்நுட்ப சரக்குகளின் போக்குவரத்திற்குப் பாதுகாப்பு அளிப்பது போன்ற கடைகோடி இராணுவ நடவடிக்கைகளைச் செய்யக் கூடிய திறமைமிக்க கூட்டாளி கிடைத்தால், அமெரிக்கா தனது வலிமையை முழுமையாக தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும்'' எனக் குறிப்பிடுகிறது. அமெரிக்கா ஒதுக்கும் இந்தக் கடைகோடி வேலைகளைச் செய்யும் எடுபிடியாக இந்திய இராணுவத்தை மாற்றும் நோக்கத்தோடுதான் இந்த இராணுவ ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் உலக மேலாதிக்கப் போர்த் தேரில் இந்தியாவும் இப்போது பிணைக்கப்பட்டு விட்டது.

''மேற்காசியாவில் ஈராக்கிற்கு அடுத்து ஈரானில் ஜனநாயகத்தைக் கொண்டு வருவது; கிழக்காசியாவில் அணு ஆயுத பலம் கொண்ட வடகொரியாவை மிரட்டிப் பணிய வைப்பது; மத்திய ஆசியாவில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எண்ணெய் வளத்தை தானே கபளீகரம் செய்வது; இவை எல்லாவற்றுக்கும் மேலாக சீனாவைத் துள்ளவிடாமல் கட்டிப் போடுவது'' என அமெரிக்கா, ஆசியாவைத் தனது மேலாதிக்கப் பிடிக்குள் வைத்துக் கொள்ளப் பல திட்டங்களை வைத்திருக்கிறது. இதற்கெல்லாம் இந்திய இராணுவம் கூலிப்படையாகப் பயன்படுத்தப்படும்.

''பதற்றம் நிறைந்த மத்திய ஆசியா, தென்கிழக்காசியா, பாரசீக வளைகுடா பகுதிகளுக்கு அமெரிக்க போர் விமானங்கள் மிகவும் விரைவாகச் சென்றடைவதற்கு, இந்தியாவின் நவீன இராணுவக் கட்டுமானங்கள் பயன்படும்'' என்கிறார், அமெரிக்க விமானப் படையைச் சேர்ந்த அதிகாரி.

''சீனாவின் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு, அமெரிக்க இராணுவத்திற்கு 2020-ஆம் ஆண்டு வாக்கில் ஒரு நண்பன் தேவைப்படும். இதற்கு இந்தியாவின் இராணுவ வலிமை பயன்படும் என்பதை நாம் மறுக்க முடியாது'' என்கிறது ஐ.ஏ.டி.ஏ.சி. அமைப்பு. 2020-இல் இந்தியா, அமெரிக்காவின் கைக்கூலி நாடாக மாறிவிடும் என்பதைத்தான் வல்லரசாகிவிடும் எனப் பூசி மெழுகுகிறார்கள் போலும். தாதாவுக்குக் கீழ் வேலை பார்ப்பவனும் தாதாதானே!

அமெரிக்கா, ஈராக் மீது போர் தொடுத்து சதாம் உசேன் ஆட்சியைத் தூக்கியெறிந்த பின், அந்நாட்டில் சில வேலைகளை ''காண்டிராக்ட்'' எடுக்க இந்தியத் தரகு முதலாளிகள் முயன்றனர். இதற்காக இந்திய இராணுவத்தை ஈராக்குக்கு அனுப்பி வைக்கவும், அப்பொழுது ஆட்சியில் இருந்த பா.ஜ.க. அரசு தயாராக இருந்தது. ஆனால், உள்நாட்டில் எழுந்த எதிர்ப்பின் காரணமாக பா.ஜ.க. அரசால் படையை அனுப்ப முடியாமல் போனது; இதனால் அமெரிக்காவும் வேலைகளை இந்திய நிறுவனங்களுக்குத் தர மறுத்து விட்டது.

தற்பொழுது போடப்பட்டுள்ள இராணுவ ஒப்பந்தத்தின் காரணமாக, இனி, இது போன்ற எலும்புத் துண்டுகளைப் பரிசாகப் பெறுவதற்கு இந்திய ஆளும் கும்பலுக்குத் தடையேதும் இருக்காது. ''தீவிரவாதத்துக்கு எதிரான போருக்கு''த் தலைமை தாங்கும் அமெரிக்காவிற்கு கறித்துண்டு என்றால், அதற்கு அடியாள் வேலை செய்யப் போகும் இந்திய ஆளும் கும்பலுக்கு எலும்புத் துண்டு என்பதுதான் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான ஒத்த நலன்.

இந்தியா ''அக்னி'', ''பிருத்வி'' ஆகிய ஏவுகணைகளைத் தயாரித்துச் சோதனைச் செய்வதையும்; அவற்றை இராணுவத்தில் சேர்ப்பதையும் ஆரம்பம் முதலே எதிர்த்து வரும் அமெரிக்கா, இந்த திட்டத்தை முடமாக்கும்


படிப்பகம்

www.padippakam.com

நோக்கத்தோடுதான், ''பேட்ரியாட்'' ஏவுகணைகளை இந்தியாவிற்கு விற்கவும், அமெரிக்காவின் உலகு தழுவிய ஏவுகணை பாதுகாப்புத் திட்டத்தில் இந்தியாவை இணைத்துக் கொள்ளவும் சம்மதித்திருக்கிறது.

மேலாதிக்க போர் வெறிபிடித்த ரீகனின் ஆசைக் கனவான ''நட்சத்திர போர்'' (ஸ்டார் வார்ஸ்) என்ற நாசகாரத் திட்டத்தின் புதிய அவதாரம்தான் ஏவுகணை பாதுகாப்புத் திட்டம். உலகு தழுவிய அளவில் மின்னணு போரை நடத்துவதற்கான ஏற்பாட்டில் இணைந்ததன் மூலம், இந்திய ஆளும் கும்பல் ''அமைதி'', ''போர்களற்ற உலகம்'' என்ற வார்த்தைகளைப் பேசுவதற்கே அருகதையற்றதாகி விட்டது.

இந்திய இராணுவத்தையே அமெரிக்காவின் தத்துப் பிள்ளையாக மாற்றும் நோக்கத்தோடு போடப்பட்டுள்ள இந்த இராணுவ ஒப்பந்தத்தை, எந்தவொரு உயர் இராணுவ அதிகாரியும் எதிர்க்கவில்லை. இதற்குக் காரணம் இராணுவக் கட்டுப்பாடு அல்ல. அமெரிக்காவிடமிருந்து இந்தியா வாங்கப் போகும் ஆயுதப் பேரத்தில் கிடைக்கப் போகும் கமிசன். கார்கில் போரில் செத்துப் போன இராணுவ வீரர்களுக்கு சவப்பெட்டி வாங்குவதிலேயே கமிசன் அடித்த இராணுவக் கும்பல், பல்லாயிரக்கணக்கான கோடி அளவில் நடைபெறவுள்ள ஆயுத பேரத்தை சும்மா விட்டுவிடுமா?

நம்மை ஆண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், தனது மேலாதிக்க நோக்கங்களுக்காக ''போயர்'' போரிலும், முதல், இரண்டாம் உலகப் போர்களிலும் இந்திய இராணுவச் சிப்பாய்களைக் கூலிப் படையாகப் பயன்படுத்தியதைப் போல, அமெரிக்கா பயன்படுத்தும். டல்ஹௌசி பிரபு கொண்டு வந்த துணைப் படைத்திட்டம் இந்திய சுதேசி மன்னர்களின் படைகளை, பிரிட்டிஷ் இராணுவத்தின் தொங்கு சதையாக மாற்றியதைப் போல, இந்த இராணுவ ஒப்பந்தம் 'சுதந்திர' இந்தியாவின் இராணுவத்தை அமெரிக்காவின் தொங்கு சதையாக மாற்றுகிறது. காலனிய காலந்தொட்டே இந்திய மக்களை ஒடுக்குவதை நோக்கமாகக் கொண்டு வளர்க்கப்பட்டுள்ள இந்திய இராணுவம், அமெரிக்க மேலாதிக்கத்தை எதிர்த்துப் போராடும் பிற நாட்டு மக்களையும் இனி விட்டு வைக்காது.

•••

அமெரிக்காவை எதிர்க்கும் நாடுகள் என்பதாலேயே , அணு ஆற்றலைப் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தைப் பெற்றுள்ள வட கொரியாவையும், ஈரானையும் ''போக்கிரி அரசுகள்'' எனத் திட்டித் தீர்க்கும் அமெரிக்க அதிபர் புஷ், இந்தியாவை, ''முன்னேறிய நவீன அணு தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள பொறுப்பான நாடு''

## மன்மோகன் சிங்கின் காலனிய விசுவாசம்

மன்மோகன் சிங் அமெரிக்காவிற்குக் கிளம்பிச் செல்லும் முன்பாக, ''இந்தியா விற்பனைக்கு அல்ல; ஈரானில் இருந்து இயற்கை எரிவாயுவை இறக்குமதி செய்யும் திட்டத்தை மூன்றாவது நபர் தீர்மானிக்க முடியாது; நாட்டுப்பற்றைப் பற்றி காங்கிரசுக்குச் சொல்லித் தர வேண்டியதில்லை'' என்றெல்லாம் போலி கம்யூனிஸ்டுகளோடு அறிக்கை போர் நடத்தினார். ஆனால், இந்த வசனமெல்லாம் வெற்றுச் சவடால்கள் என்பது மன்மோகன் சிங் அமெரிக்க மண்ணில் காலடி எடுத்து வைத்தவுடனேயே அம்பலமானது.

''ஈரானில் நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது; இந்த திட்டத்தை நிறைவேற்றுவதில் பல அபாயங்கள் இருக்கின்றன; அதனால், இத்திட்டத்திற்கு முதலீடு செய்யத் தயங்குகிறார்கள்'' என பேட்டியளித்து, ஈரானில் இருந்து இயற்கை எரிவாயுவை இறக்குமதி செய்யும் திட்டத்தைக் கை கழுவ இந்தியா தயாராக இருப்பதை சூசகமாக தெரிவித்துவிட்டார், மன்மோகன் சிங்.




மேலும் அமெரிக்கா மிரட்டாமலேயே சில்லறை வியாபாரத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைய அனுமதிப்பது; தொழிலாளர் வைப்பு நிதியைப் பன்னாட்டு நிறுவனங்களிடம் ஒப்படைப்பது, அந்நிய கணக்காயர் நிறுவனங்களும் (Auditing Firms), சட்ட நிறுவனங்களும் (Legal Firms) இந்தியாவில் நுழைய அனுமதிப்பது - ஆகிய பொருளாதார சீர்திருத்தங்கள் குறித்தும் பேச்சு வார்த்தை நடத்தினார்.

குறிப்பாக, விவசாயத்தில் அதிஉயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது என்ற பெயரில், இரண்டாவது பசுமைப் புரட்சியைக் கொண்டுவரத் திட்டம் போடுகிறது, அவரது அரசு. முதல் பசுமைப் புரட்சி பாரம்பரியமிக்க இந்திய விதைகளை அழித்தது; மண்ணை நஞ்சாக்கியது என்றால் இந்த இரண்டாம் பசுமைப் புரட்சி இந்திய விவசாயிகளை விவசாயத்தில் இருந்து தூக்கியெறிந்துவிட்டுத்தான் ஓயும்!

உலகிலேயே மிகவும் அதிகமாக வெறுக்கப்படும் நபர் ஜார்ஜ் புஷ்தான். அவரது சொந்த நாட்டிலேயே, கிறித்தவ மத வெறியர்களும், போர் வெறியர்களும்தான் அவரை ஆதரிக்கிறார்கள். இப்படிப்பட்ட ஜார்ஜ் புஷ்ஷின் தலைமையை, ''உலகிலுள்ள ஒவ்வொரு நாகரிக மனிதனும் பாராட்டுவான்; ஏற்றுக் கொள்வான்'' எனப் புகழ்ந்து பேசி, தனது அருவருப்பான அடிமைத்தனத்தைக் காட்டிக் கொண்டார், மன்மோகன் சிங்.

இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகம் தனக்கு டாக்டர் பட்டம் வழங்கியதற்காக, ''காலனிய ஆட்சியின் பொழுது, பிரிட்டிஷ் அரசு இந்தியாவிற்குப் பல நன்மைகளைச் செய்திருக்கிறது'' எனக்கூறி, தனது காலனிய விசுவாசத்தைக் காட்டிக் கொண்ட மன்மோகன் சிங்கிடம் ஏகாதிபத்திய அடிவருடித்தனத்தைத் தவிர, வேறெதையும் எதிர்பார்க்க முடியாது! •



படிப்பகம்

www.padippakam.com

எனப் பாராட்டுகிறார். நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போட்டதற்குக் கிடைத்த பாராட்டு என்பதற்கு மேல், இதில் அலசி ஆராய்வதற்கு எதுவுமே இல்லை. ஆனால் அமெரிக்க அடிவருடிகளோ, இந்தப் பாராட்டைக் கேட்டவுடனேயே, ''இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக அமெரிக்கா மறைமுகமாக ஏற்றுக் கொண்டு விட்டதாக'' இதற்குப் பொழிப்புரை எழுதுகிறார்கள்.

இந்தியாவில் உள்ள 15 அணு உலைகளில் ஒன்றுகூட சமூகப் பயன்பாட்டுக்காக (மட்டும்) இயக்கப்படவில்லை என்பதே உண்மை. ''இந்தியாவில் உள்ள அணு உலைகளை சமூகப் பயன்பாட்டுக்கானது, இராணுவப் பயன்பாட்டுக்கானது என இரண்டாகப் பிரிப்பது கடினம்'' என அணு விஞ்ஞானிகள் கூறியிருப்பதில் இருந்தே இதனைத் தெரிந்து கொள்ளலாம். அதனால்தான் இராணுவ ஒப்பந்தத்தின் மை உலரும் முன்பே, அணு சக்தி ஒப்பந்தத்திலும் இந்தியாவைக் கையெழுத்துப் போட வைத்துவிட்டது அமெரிக்கா.

அணு ஆயுதப் பரவல் சட்டத்தில் கையெழுத்துப் போட முடியாது; சர்வதேச அணு சக்தி கழகத்தின் கட்டுப்பாடுகளுக்குக் கட்டுப்பட முடியாது என்றெல்லாம் வீராப்பாக முழங்கிக் கொண்டிருந்த இந்தியா, இன்று, அணு சக்தி தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றம் வகுக்கும் விதிகளுக்கும் கட்டுப்படுவதாக ஒப்புக் கொண்டுள்ளது.

ஒப்பந்தம் என்றால், அதில் கையெழுத்துப் போடும் இரண்டு தரப்புக்குமே சமமான அளவில் இலாபம் இருக்க வேண்டும். இந்தியா, தனது அணு சக்தி கொள்கையையே மாற்றிக் கொண்டுள்ளது. இதற்குப் பிரதிபலனாக அதிபர் புஷ், ''அணு தொழில்நுட்பத்தை இந்தியாவிற்குத் தர விதிக்கப்பட்டுள்ள தடைகளைத் தளர்த்த அமெரிக்க நாடாளுமன்றத்தில் முயற்சி செய்வேன்; அணு ஆயுத வல்லரசு நாடுகளிடம், இந்தியாவை விதிவிலக்காகப் பாவித்து, அணு வேதிப் பொருட்கள் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள விதிகளைத் தளர்த்துமாறு கோருவேன்'' என்ற வாக்குறுதிகளை மட்டுமே கொடுத்துள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த அணு சக்தி விஞ்ஞானிகளோ, ''வாக்குறுதிகள் யாருக்கு வேண்டும்? எங்களுக்கு யுரேனியம் தான் வேண்டும்'' என்று முணுமுணுக்கிறார்கள். அடுத்தடுத்து பல அணு உலைகளை இந்தியா அமைத்திருந்தாலும், அவற்றுக்குத் தேவைப்



ஈரானில் இருந்து இயற்கை எரிவாயுவை இந்தியா இறக்குமதி செய்வதை நாங்கள் விரும்பவில்லை எனச் சில மாதங்களுக்கு முன்பு அமெரிக்கா பகிரங்கமாக அறிவித்த பொழுது, அம்முடிவைப் பற்றி அப்பொழுது பிரதமர் மன்மோகன் சிங்கும், வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர் சிங்கும் (இடது ஓரம்), அமெரிக்க வெளியுறவுச் செயலர் கண்டோலீசா ரைஸுடன் (வலது ஓரம்) புதுதில்லியில் நடத்திய விவாதம். *(கோப்புப் படம்)*

படும் யுரேனியத்தை இறக்குமதி செய்து கொள்வதற்கு அமெரிக்காவைத்தான் மலைபோல நம்பியிருக்கிறது. இந்திய அணுசக்தி துறையின் குடுமி, இன்று அமெரிக்காவின் கைகளுக்குள் சிக்கிக் கொண்டிருக்கிறது என்றுதான் இதிலிருந்து முடிவுக்கு வர முடியும்.

இந்தியாவிடம் அணுகுண்டுகள் இருக்கலாம். ஆனால், அவற்றைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவுமான உரிமையை இந்தியாவிடமிருந்து அமெரிக்கா இரகசியமாகப் பெற்றிருக்கக் கூடும். இல்லையென்றால், அணுகுண்டு வெடித்த நாயகன் வாஜ்பாயி, ''இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா தனக்கு தேவையான அணு ஆயுதப் பலத்தைத் - தீர்மானிக்க முடியாமல் போகும்'' என்று ஏன் அச்சப்பட வேண்டும்? அமெரிக்கா, இந்தியாவைத் தனது நம்பகமான கூட்டாளி என்று ஏற்கும்பட்சத்தில், எந்த உரிமையை வேண்டுமானாலும் அமெரிக்காவின் காலடியில் சமர்ப்பிக்கும் எனப் பலமுறை நாம் சுட்டிக் காட்டியிருக்கிறோம். இந்த ஒப்பந்தம் அதனை உண்மை என நிரூபித்திருக்கிறது.

•••

**அ**மெரிக்காவில் கையெழுத்தாகியுள்ள இந்த இரண்டு ஒப்பந்தங்களும் திடீரென்று உருவானவையல்ல; பா.ஜ.க. ஆட்சியின் பொழுது வெளியுறவுத் துறை மந்திரியாகவும், இராணுவ அமைச்சராகவும் இருந்த ஜஸ்வந்த் சிங்குக்கும், டால்போட் என்ற அமெரிக்க அதிகாரிக்கும் இடையே இரகசியமாக நடைபெற்று வந்த பேச்சு வார்த்தைகள் தான், இப்பொழுது அணு சக்தி ஒப்பந்தமாக உருவாக்கப்பட்டுள்ளது.

ஈராக்கிற்கு இந்தியப் படைகளை அனுப்ப பா.ஜ.க. முயற்சி செய்ததை, காங்கிரசு சட்டபூர்வ ஒப்பந்தமாக இந்தியா மீது திணித்து விட்டது. அதாவது பா.ஜ.க. தொடங்கி வைத்ததை காங்கிரசு முடித்து வைத்திருக்கிறது.

இந்த இரண்டு ஒப்பந்தங்களும், கையெழுத்தாவது குறித்து நாடாளுமன்றத்தில் கூடத் தெரிவிக்காமல், மிகவும் இரகசியமாகவே பேச்சு வார்த்தைகள் நடந்துள்ளன. குறிப்பாக, இராணுவ அமைச்சராக இருக்கும் பிரணாப் முகர்ஜி கலந்தாய்வு ஒன்றில் பங்கு பெறுவதற்காக அமெரிக்காவுக்குச் செல்வதாகக் கூறிவிட்டு, இராணுவ ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டு விட்டுத் திரும்பினார். இனி, நாடாளுமன்றம் இந்த இரண்டு ஒப்பந்தங்களையும் அங்கீகரிக்கும் ரப்பர் ஸ்டாம்பு சேவையைச் செய்ய வேண்டியது தான் பாக்கி!

முதலாளித்துவ அறிஞர்களால் புனிதமாகக் கருதப்படும் நாடாளுமன்றத்தையே மதிக்காத காங்கிரசிடம், குறைந்தபட்ச பொதுத் திட்டத்தை மதித்து நடக்குமாறு போலி கம்யூனிஸ்டுகள் கெஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். பா.ஜ.க.வுக்கு மாற்று என காங்கிரசைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கும் போலி கம்யூனிஸ்டுகளிடம், இந்தச் செக்கு மாட்டுத்தனத்தைத் தவிர வேறெதையும் நாம் எதிர்பார்க்க முடியாது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி, அமெரிக்க அடிமைத்தனத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்துள்ளது, போலி கம்யூனிஸ்டுகளின் தயவோடு - என்பதே நடப்பு உண்மை!

• முத்து



படிப்பகம்

www.padippakam.com

# குற்றவியல் சட்டத் திருத்தங்கள்

# "போலீசே நீதிபதி!"

வழக்குரைஞர்களின் விடாப்பிடியான போராட்டத்தின் விளைவாக குற்றவியல் நடைமுறைச் சட்டத் (Cr.PC) திருத்தங்களின் அமலாக்கத்தை மைய அரசு நிறுத்தி வைத்திருக்கிறது. 1994-இல் காங்கிரசு அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தச் சட்டத் திருத்தங்களில் பெரும்பகுதி, போலீசு கமிசனால் சிபாரிசு செய்யப்பட்டவை என்கிறார்கள் போராடும் வழக்குரைஞர்கள். மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுப்பதில் போலீசு கமிசனுக்கு எந்த விதத்திலும் சளைக்காத சட்டக்கமிசனும் 1995-இலேயே இந்தத் திருத்தங்களில் பெரும்பான்மையானவற்றை அங்கீகரித்திருக்கிறது.

இருப்பினும், கடந்த 10 ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த இந்தச் சட்டத் திருத்தம், காங்கிரசு கட்சியுடன் சேர்ந்து மீண்டும் உயிர்த்தெழுந்து விட்டது. கடந்த மே மாதம் 4-ம் தேதியன்று நாடாளுமன்ற மேலவையிலும் 5-ம் தேதி மக்களவையிலும் எவ்வித எதிர்ப்புமின்றி சத்தமில்லாமல் நிறைவேற்றப்பட்டு, விஞ்ஞானி கலாம் அவர்களின் கைநாட்டையும் பெற்றுவிட்டது.

தடா, பொடா போன்ற ஆள்தூக்கிச் சட்டங்கள் - அவற்றின் கடைந்தெடுத்த பாசிசத் தன்மை காரணமாகவும், அவற்றை அறிமுகப்படுத்தும் போது ஆளும் கட்சிகளும் அதிகார வர்க்கமும் திட்டமிட்டே கிளப்பும் ஆரவாரம் காரணமாகவும் மக்களின் கவனத்தை ஈர்த்து விடுகின்றன. அத்தகைய சட்டங்களை ஏந்திச் சுழற்றும் போலீசின் இயல்பான அராஜகமும், ஜெயலலிதா போன்ற பாசிஸ்டுகளின் விசேட குணாம்சங்களும், அதுவரை எதையும் கண்டுகொள்ளாமலிருந்த மக்கட்பிரிவினரின் பார்வையையும் இத்தகைய சட்டங்களை நோக்கித் திருப்பி விடுகின்றன.

தடா, பொடா போன்ற சட்டங்கள் ஷகிலா படத்தைப் போலப் பச்சையானவை. தற்போதைய சட்டத்திருத்தமோ ஆபாசத்தை அடையாளம் காண முடியாத ''ஈஸ்ட்மென் கலர்'' குடும்பச் சித்திரம் போன்றது. ''பெண்களை இரவில் கைது செய்யக்கூடாது; பகலில் கைது செய்வதென்றாலும் பெண் போலீசார்தான் கைது செய்ய வேண்டும்; காவல் நிலையக் கொலை மற்றும் பாலியல் வன்புணர்ச்சிக்கு நீதித்துறை விசாரணை; யார் கைது செய்யப்பட்டாலும் கைது குறித்த விவரங்களை 'கைதி' குறிப்பிடும் நபருக்குத் தெரிவிக்க வேண்டும்'' போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சட்டத் திருத்தங்களில் சில.

பொதுக் கருத்தைத் திசைதிருப்பும் நோக்கத்துடன் திட்டமிட்டே தொங்கவிடப்பட்டிருக்கும் இந்தப் 'பூசணிக் காய்களை' ஒதுக்கித் தள்ளிவிட்டு உள்ளே செல்லும்போதுதான் சட்டத் திருத்தத்தின் உண்மையான முகம் நமக்குப் புலப்படுகிறது. அவற்றில் சிலவற்றை மட்டும் காண்போம்.

✱ ''சாதி - மத - சமூக (வர்க்க) அடிப்படையில் வகுப்பு மோதல்களைத் தூண்டுவது முதல், இந்த அடிப்படையில் சட்டபூர்வமாக அமைந்த அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டுவது'' வரையிலான குற்றங்களுக்குத் தண்டனை விதிக்கிறது இந்திய தண்டனைச் சட்டத்தின் (IPC) 153-அ, ஆ பிரிவுகள். அத்வானி வகையறாக்களுக்காகவே உருவாக்கப்பட்டதை போன்று தோன்றும் இந்தச் சட்டப்பிரிவின் கீழ் அதிகம் கைது செய்ய ப்படுபவர்கள் புரட்சியாளர்களும், ஜனநாயக சக்திகளும்தான்.

கொக்கோ கோலாவிற்கு எதிராகச் சுவரெழுத்து எழுதிய குற்றத்துக்காக தருமபுரியைச் சேர்ந்த வி.வி.மு. தோழர்கள் இந்தக் குற்றப் பிரிவின் கீழ் தான் இன்னமும் சிறையில் இருக்கின்றனர். 'பார்ப்பன' என்ற சொல்லைப் பயன்படுத்தியதற்காக ம.க.இ.க. தோழர்கள் இந்தக் குற்றப்பிரிவின் கீழ் பலநூறு முறை கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பாபர் மசூதியை இடித்ததற்காக அத்வானி மீதும் இந்தப் பிரிவில் தான் வழக்கு பதிவு செய்யப்பட்டு தூங்கிக் கொண்டிருக்கிறது.

மசூதி இடிப்பிற்கு காவல் நின்ற ராவ் அரசு, மதவெறியை ஒடுக்குவதற்காக என்று காரணம் சொல்லி 153 - அ ஆ என்று புதிய திருத்தத்தை 1994-இல் கொண்டு வந்திருக்கிறது. இந்த புதிய திருத்தத்தின்படி பொது இடங்களில் குச்சியுடன் ஊர்வலம் போவது விசேட தண்டனைக்குரியதாம்! இது ஆர்.எஸ்.எஸ்.-இன் தடிக்கம்பை நிச்சயம் பிடுங்கப் போவதில்லை, தொழிலாளிகளின் கொடிக்கம்பைப் பிடுங்குவதுதான் இதன் நோக்கம்.

✱ ஆர்.எஸ்.எஸ்.-இன் பெயரைச் சொல்லி 144 தடையுத்தரவிலும் 'அ' என்ற பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. இதன்படி 6 மாத காலத்திற்கு ஒரேயடியில் இந்த 'ஊரடங்கு' உத்தரவைப் பிறப்பிக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு இரண்டே இரண்டு உத்தரவுகளைப் பிறப்பித்து விட்டால், ஆர்ப்பாட்டம், ஊர்வலம், உண்ணாவிரதம் உட்பட எந்தவிதமான 'தொந்தரவு'ம் இல்லாமல், ஆளும் வர்க்கங்கள் தமது சுரண்டலை நடத்த முடியும். அதிகார வர்க்கமும் போலீசும் தமது 'கல்லா கட்டும் கடமையை' இடையூறின்றிச் செய்ய முடியும்.

✱ அரசு ஊழியர்களைத் தமது கடமையை ஆற்றவிடாமல் தடுத்தால், பேசினால், பார்த்தால்கூடக் கைது செய்ய ஏதுவாக இந்தியத் தண்டனைச் சட்டத்தில் 324, 332, 353 போன்ற பிரிவுகள் ஏற்கெனவே உள்ளன. ''மரியாதையா பேசுங்க சார்'' என்று போலீசிடம் கூறும் அளவு மானமுள்ளவர்கள், போலீசிடமே சட்டம் பேசும் அளவு துணிவுள்ளவர்கள் போன்றோர்தான் தற்போது இந்தப் பிரிவுகளில் கைது செய்யப்படுபவர்கள்.


இவர்களில் பலர் போலீசாரையும் அரசு அதிகாரிகளையும் தாக்கி விடுகிறார்களாம், கைதானாலும் பிணையில் வந்து விடுகிறார்களாம். இதன் காரணமாக போலீசைத் தாக்குவதற்கு அவர்கள் பயன்படுத்திய ஆயுதத்தைப் பறிமுதல் செய்ய முடிவதில்லையாம். பறிமுதலை உத்திரவாதப்படுத்துவதற்காக இது பிணையில் வர முடியாத, அதாவது சிறைக்குச் சென்றே தீரவேண்டிய குற்றமாக மாற்றப்பட்டிருக்கிறதாம். போலீசை எதிர்த்துப் பேசுபவர்கள் சிறை செல்ல வேண்டியிருக்கும் என்பது மட்டுமல்ல. இந்தச் சட்டத்திருத்தத்தின்படி பல்லும் - நாக்கும் கூடப் பறிமுதல் செய்யப்படும் ஆயுதங்களாகி விடலாம்.



படிப்பகம்

www.padippakam.com

✱ அரசியல் இயக்கங்கள், தொழிற்சங்க இயக்கங்களைச் சேர்ந்த முன்னணியாளர்களுக்காகவும், ரேசன் அரிசி, குடிநீர், பேருந்து போன்ற அடிப்படைத் தேவைகளுக்காகப் போராடும் மக்களுக்காகவுமே ஒதுக்கப்பட்ட பிரிவு ஒன்று உண்டென்றால் அது இ.பி.கோ.506. 'கலைந்து போ' என்று போலீசு சொன்ன மறுகணமே போகாதவர்களைச் சிறைக்கு அனுப்புவதற்காகப் போடப்படும் பொய் வழக்குகள் அனைத்திலும் இந்தப் பிரிவு கட்டாயம் இடம் பெறும். 'குற்றமுறு மிரட்டல்' என்று கூறப்படும் இந்தக் 'குற்றத்தில்', குற்றம் சாட்டப்படுபவர் வன்முறையில் ஈடுபடவோ, ஆயுதம் வைத்திருக்கவோ தேவையில்லை. வெறும் வாய் மிரட்டல் என்று வழக்கு பதிவு செய்தால் போதுமானது. இதற்கான தண்டனை 3-இலிருந்து 7 ஆண்டாக உயர்த்தப்பட்டுள்ளது. இரண்டு முறைக்கு மேல் இந்தப் பிரிவில் கைது செய்யப்படுபவர்களை போலீசு நிலையத்தின் 'கேடி லிஸ்டில்' சேர்க்கவும் சொல்கிறது புதிய திருத்தம்.



குற்றவியல் நடைமுறைச் சட்டத் திருத்தங்களை எதிர்த்து, சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

✱ பிணை, நீதிமன்ற வாய்தா ஆகியவற்றில் கொண்டு வரப்பட்டுள்ள திருத்தங்களோ குற்றம் சாட்டப்பட்டவரை நிரந்தரமாகச் சிறையில் வைக்க வழி செய்கின்றன. சாதாரணக் குற்றங்களுக்காகக் கைது செய்யப்படும் ஏழைகள் பிணையில் வெளிவர முடியாமல் தவிப்பதற்கு முக்கியக் காரணம் 'சொத்துள்ள ஜாமீன்தாரர்கள்' யாரும் அவர்களுக்கு இல்லாமலிருப்பதுதான். மனிதனைக் காட்டிலும் சொத்தை மதிக்கும் நம் நீதிமுறை, தொழில்முறை ஜாமீன்தாரர்கள் பலரை நீதிமன்ற வளாகத்திலேயே உருவாக்கி விட்டிருக்கிறது. அவர்கள் இனி ஒவ்வொருமுறை ஜாமீன் கொடுக்கும் போதும், ஏற்கெனவே அவர்கள் எத்தனை பேருக்கு ஜாமீன் கொடுத்துள்ளனர் என்ற விவரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்கிறது புதிய திருத்தம். இதன் விளைவாக ஜாமீனின் 'விலை' உயரும். ஏழைகள் நிரந்தரமாகச் சிறையில் வாட நேரும்.

✱ ஜாமீனில் வெளிவந்தவர்கள் நீதிமன்ற வாய்தாவுக்கு ஒருமுறை வரத் தவறினாலும் ஓராண்டு தண்டனை என்கிறது இன்னொரு திருத்தம். வாய்தாவுக்கு வராத போலீசு அதிகாரிகள், வாய்தா போடுவதையே 90 சதவீதக் கடமையாகச் செய்து வரும் நீதிபதிகள் ஆகியோருக்கு எந்தத் தண்டனையும் கிடையாது. பிழைப்பை விட்டு நாள் முழுவதும் நீதிமன்றப் படிக்கட்டில் காத்து நிற்கும் ஏழைகளுக்கு மட்டும் சிறை!

✱ போலீசின் பொய் வழக்குகளிலிருந்து தற்காத்துக் கொள்ளப் பயன்படும் 'எதிர்பார்ப்புப் பிணை' (முன் ஜாமீன்) என்பதை, 'போலீசிடம் பிடித்துக் கொடுக்கும் பிடிவாரண்டாக மாற்றி விட்டது இந்தச் சட்டத் திருத்தம். இதன்படி முன் ஜாமீன் கோருபவர் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமாம். முன் ஜாமீன் மறுக்கப்பட்டால் போலீசு கைது செய்து கொள்ளுமாம்! நீதிமன்றத்தை காவல் நிலையமாகவும், வழக்குரைஞர்களை ஆள்காட்டிகளாகவும் மாற்றும் இந்தத் திருத்தம்தான், கபடத்தனமான இந்தச் சட்டத் திருத்தத்தின் நோக்கத்தை பச்சையாக அம்பலமாக்கி விட்டது. இதுவன்றி, ''குற்றம் சாட்டப்பட்டவரை அடையாளம் காணும் பணியை ஆர்.டி.ஓ.வே செய்யலாம்'' என்ற திருத்தம் போலீசு நிலையத்தையே அதாவது அதிகார வர்க்கத்தையே - நீதித்துறையாக்குகிறது.

✱ அரசு வழக்குரைஞர் நியமனத்திலும் பாரிய மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறது இந்தச் சட்டத் திருத்தம். தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களால் அரசு வழக்குரைஞர் நியமிக்கப்படும் முறையை மாற்றி, ஒரு உயர் போலீசு அதிகாரியின் தலைமையிலான ஆணையத்தால் செய்யப்படும் நிரந்தர நியமனமாக அதை மாற்றுகிறது. அதாவது அரசுத் தரப்பு என்பதை போலீசு தரப்பு என்பதாகவே முழுமையாக மாற்றியமைக்கிறது.

✱ சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்காக அல்லும் பகலும் அயராது உழைக்கும் போலீசுக்கு வெறும் அண்ணா பதக்கம் போதாதல்லவா? சிறு குற்றங்களுக்கான அபராதம் ரூ.100-இலிருந்து ரூ.1000 என உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது, போலீசின் லஞ்ச வேட்டைக்கான வாய்ப்பு பெரிதாக்கப்பட்டுள்ளது.

✱ அழியக் கூடிய பொருட்கள் அல்லது 500 ரூபாய் மதிப்புக்குக் குறைவான பொருட்களை போலீசே ஏலம் விடவும் புதிய திருத்தம் அனுமதி தருகிறது. மோதிரம், வாட்சு, சைக்கிள் முதல் இரு சக்கர வாகனங்கள் வரையிலான பொருட்களை தள்ளுபடி விலையில் வாங்க கடைவீதிக்குப் போகத் தேவையில்லை. இனி போலீசு நிலையத்திலேயே வாங்கிக் கொள்ளலாம். திருட்டுப் பொருள்களை வாங்கி விற்கும் சேட்டுகள் இத்திருத்தத்தின் மூலம் ஒழித்துக் கட்டப்படுவார்கள்!

✱ சிறிய சண்டை சச்சரவுகளில் கைது செய்யப்படுவோர் (பிரிவு - 320) போலீசு ஸ்டேசனை ருசித்தபின் மனம் திருந்திச் சமாதானமாகப் போக விரும்பினாலும் முடியாதாம். கட்டைப் பஞ்சாயத்து செய்யும் உரிமை போலீசிடமிருந்து பறிக்கப்படுவதால், 'சமாதானத்துக்கும்' தடை விதிக்கிறது புதிய திருத்தம்.

●●●



படிப்பகம்

www.padippakam.com

நாற்பதுக்கும் மேற்பட்ட திருத்தங்களில் சிலவற்றைப் பற்றி மட்டுமே நாம் இங்கே குறிப்பிட்டிருக்கிறோம். இந்தத் திருத்தங்களின் தன்மையிலிருந்து இவற்றின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

முதலாவதாக, போலீசையும் அதிகார வர்க்கத்தையும் நீதித்துறையின் சில்லறைத் தொந்திரவுகளிலிருந்தும் விடுவித்து, அவற்றின் வல்லாட்சியை இத்திருத்தங்கள் உத்திரவாதப்படுத்துகின்றன. இரண்டாவதாக, நடைபாதை வியாபாரிகள், உதிரித் தொழில் செய்வோர் போன்ற ஏழை-எளிய மக்களைத் துன்புறுத்தவும், கொள்ளையடிக்கவும் போலீசார் பயன்படுத்தும் குற்றப்பிரிவுகளைக் கடுமையாக்குவதன் மூலம் அவர்கள் நீதிமன்றத்தை நாடுவது குறித்து சிந்திக்கவும் முடியாமல் செய்து, ஏழைகள் அனைவரையும் குற்றவாளிகளாக்குகிறது; ஏழ்மையையே குற்றமாக்குகிறது. மூன்றாவதாக தொழிற்சங்கங்களும், அரசியல் இயக்கங்களும், மக்களும் நடத்தும் சட்ட வரம்புக்குட்பட்ட போராட்டங்களைக் கூட அரசு இனி சகித்துக் கொள்ளாது என்பதையும், எதிர்ப்புக் குரலே எழும்பாத 'மயான ஜனநாயகம்' மட்டுமே அனுமதிக்கப்படும் என்பதையும் இத்திருத்தங்கள் தெளிவுபடுத்துகின்றன.

'சிறு குற்றங்க'ளுக்கான அபராதத்தை அதிகரிப்பது, போராடும் மக்களுக்குத் தண்டனையை அதிகரிப்பது, நீதியின் விலையை அதிகரிப்பது, போலீசின் அதிகாரத்தை அதிகரிப்பது - போன்றவை இந்தத் திருத்தங்கள் தோற்றுவிக்கும் விளைவுகள். எனவே நீதிமன்றத்தின் தேவை குறைந்து சிறைச்சாலையின் தேவை இனி அதிகரிக்கும். புதிய சிறைச்சாலைகள் கட்டுவதற்காக அரசு உலக வங்கியிடம் கடன் வாங்கலாம்; அல்லது பெருகி வரும் 'குற்றச் சந்தை'யைக் கணக்கில் கொண்டு, அமெரிக்காவைப் போல இங்கேயும் சிறைத்துறையைத் தனியார்மயமாக்கலாம். இவை இந்தத் திருத்தம் தோற்றுவிக்கக் கூடிய விளைவுகள். திருத்தங்களைத் திணிப்பதற்கான காரணம் என்ன?

இந்தச் சட்டத் திருத்தங்கள் 1994-இல் நரசிம்ம ராவ் அரசால் ஏன் கொண்டு வரப்பட்டன, தற்போது காதும் காதும் வைத்தாற்போல அவை ஏன் திணிக்கப்படுகின்றன என்பவைதான் நம்முன் உள்ள கேள்விகள். குற்றங்கள் அதிகரிக்கும்போது அந்தக் குறிப்பிட்ட குற்றங்களுக்கான தண்டனையைக் கூட்டுவதும் புதிய வகைக் குற்றங்கள் தோன்றும்போது அதற்குத் தேவையான புதிய சட்டங்களை இயற்றுவதும் தவிர்க்கவியலாதவை என்பது போலீசும் சட்ட கமிசனும் அரசும் கூறும் வாதங்கள்.



வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டு எதிர்பாராதவிதமாக மாட்டிக் கொண்ட செல்வம், பாஸ்கர் என்ற இரு போலீசுக்காரர்கள் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படுகின்றனர்: இது போன்ற ஆயிரக்கணக்கான குற்றங்களைச் சுதந்திரமாக, சட்டப்பூர்வமாகவே செய்யும் காக்கிச் சட்டை கிரிமினல்களை உடனடியாகத் தண்டிக்க சட்டத்திருத்தம் வருமா?

குற்றங்கள் தோன்றுவதற்கான சமூக நிலைமைகளை மாற்றாமல், குற்றத்தை ஒழிப்பதாகக் கூறும் பேச்சு. ஒரு மோசடி என்பது ஒருபுறமிருக்கட்டும்; கடந்த 15 ஆண்டுகளில் நம் கண்முன்னே அதிகரித்துவரும் குற்றங்களின் தன்மைகள் என்ன? தீண்டாமைக் குற்றங்கள், குழந்தை விபச்சாரம், கட்டாய விபச்சாரம், விதவிதமான பாலியல் வக்கிரங்கள், நிதி நிறுவன மோசடிகள், பங்குச் சந்தை மோசடிகள், பொதுச் சொத்தைச் சூறையாடும் குற்றங்கள், தண்டிக்கவே முடியாத ஊழல் குற்றங்கள், மிச்சம் இருக்கின்ற தொழிலாளர் நல சட்டங்களைக் கூட மீறும் முதலாளிகளின் குற்றங்கள், அதிகரித்து வரும் சுற்றுச்சூழல் நாசமாக்கும் குற்றங்கள், சட்ட விரோதக் கந்துவட்டிக் கொள்ளை, போலி விதை, உரம், பூச்சி மருந்து வியாபாரம் என மிக நீண்ட பட்டியலை நாம் கூற முடியும்.

இவையெதைப் பற்றியும் இந்தச் சட்டத் திருத்தம் கவலைப்படவில்லை என்பது மட்டுமல்ல; இந்தக் குற்றவாளிகளுக்குச் சாதகமாகப் பல சட்டங்கள் திருத்தப்பட்டிருக்கின்றன. ஆண்டுதோறும் பல்லாயிரம் கோடி கருப்புப் பணத்தை வெளிநாடுகளுக்குக் கடத்தும் முதலாளிகளின் கிரிமினல் குற்றம் சிவில் தாவாவாக மாற்றப்பட்டுள்ளது. ஃபெரா (FERA) என்ற கிரிமினல் சட்டம் ஃபெமா (FEMA) என்ற சிவில் சட்டமாக்கப்பட்டுள்ளது. இது ஒரேயொரு சான்று.

மேற்கண்ட வகையிலான திருத்தங்கள் அரசின் 'பொருளாதாரக் கொள்கை முடிவுகள்' என்று அரசால் வகைப்படுத்தப்படுகின்றன. இந்தக் 'கொள்கை' களுக்கு எதிரான போராட்டங்களை நசுக்கவும், தொடர்ந்து எதிர்ப்போரை 'கேடி லிஸ்ட்'இல் சேர்க்கவும் புதிய சட்டத்திருத்தம் வகை செய்கிறது.

போலீசைக் கட்டுப்படுத்துவது போன்ற தோரணையில் இந்தச் சட்டத் திருத்தத்தில் கூறப்படுபவையனைத்தும் நகைக்கத்தக்க ஏமாற்றுகள். ''உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் அனைத்தும் சட்டங்களே'' என்ற கோட்பாட்டின்படி இவை எதுவும் புதிய கண்டுபிடிப்பு அல்ல.

கொலை, கொள்ளை, பாலியல் குற்றங்கள் உள்ளிட்ட அனைத்திலும் கிரிமினல் கும்பல்களுடன் கைகோர்த்துக் கொண்டு போலீசும் ஈடுபட்டு வருகிறது என்பதே நாம் போலீசிடம் கண்டிருக்கும் புதிய வளர்ச்சி. சட்டத்திற்குப் பணிந்து நடக்க வேண்டிய குடிமகன் இழைக்கும் அதே குற்றத்தை, சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்காகவே சம்பளம் வாங்குவோர் இழைக்கும் போது அதற்கென்ன தண்டனை என்பது குறித்து இந்தச் சட்டத் திருத்தம் மூச்சு விடவில்லை. மாறாக, இந்தச் சீருடைக் குற்றவாளிகளை மேலும் ஆயுத பாணியாக்கியிருக்கிறது.

இந்த நாட்டின் ஆகப் பெரும்பான்மையான மக்களின் அன்றாட வாழ்க்கையையும், அவர்களது அமைதி வழியிலான போராட்டங்களையும் கூட நசுக்கும் வகையிலும், கருத்துரிமை என்பதை மக்கள் பயன்படுத்தவே முடியாத உரிமையாக ஆக்கும் வகையிலும் மாற்றுகின்ற இந்தச் சட்டத் திருத்தம் ஒரு எதிர்ப்புக் குரல் கூட இல்லாமல்



படிப்பகம்

www.padippakam.com

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறதே, எப்படி?

இதில் வியப்புக்கே இடமில்லை. நாட்டையே அடகு வைக்கும் காட் ஒப்பந்தத்தில் நாடாளுமன்றத்துக்கே தெரியாமல் சில அதிகாரிகள் கையெழுத்திடுவதும், அதை நாடாளுமன்றம் அங்கீகரிப்பதும் சாத்தியமாகும்போது இதில் அதிசயிக்க என்ன இருக்கிறது?

இத்திருத்தம் கொண்டு வரப்பட்டது 1994-ஆம் ஆண்டு. காட் ஒப்பந்தத்தின் விளைவுகள் தோற்றுவிக்கக் கூடிய போராட்டங்களைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையே இந்தச் சட்டத்திருத்தம்.

நாட்டின் இறையாண்மைக்குப் பொருத்தமான விகிதத்தில்தான் மக்களுக்கு ஜனநாயகம் இருக்க முடியும். இன்று 'இரண்டாவது தலைமுறைச் சீர்திருத்தம்' என்ற பெயரில் நாலு கால் பாய்ச்சலில் நாடு அக்கக்காகப் பிரித்து விற்கப்படுகிறது. 'இறையாண்மை' என்ற சொல்லே அரசியல் அகராதியிலிருந்து நீக்கப்படவிருக்கும் காலத்தை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். எனவேதான், ஜனநாயகமும் அவசர அவசரமாக நீக்கப்படுகிறது.

இந்த 'ஜனநாயகப் படுகொலை'யை வழக்குரைஞர்கள் எதிர்ப்பது உண்மைதான். ஆனால் நீதிபதிகளோ, தனது அதிகாரத்தை தட்டில் வைத்து அதிகாரவர்க்கத்திடம் வழங்குவதற்கு தயாராகவே இருக்கின்றனர். நாடாளுமன்றம், நிர்வாக எந்திரம், போலீசு, நீதித்துறை என்று வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படும் 'அரசு', மக்களுக்கெதிராக ஒன்றுபட்டு நிற்கிறது. எனவேதான் 'ஜனநாயகத்தின்' இந்த உறுப்புகள் 'உடுக்கை இழந்தவன் கை போல' மிகவும் இயல்பாகவும், விவாதமின்றியும், அனிச்சையாகவே ஐக்கியப்படுகின்றன.

வழக்குரைஞர்களின் போராட்டம் இந்தச் சட்டத்திருத்தத்தின் அமலாக்கத்தை நிறுத்தி வைத்திருப்பது உண்மைதான். எனினும் அபாயம் நீங்கவிடவில்லை. ரம்பம் வைத்து கதறக் கதற கழுத்தை அறுப்பது பாரதீய ஜனதாவின் பாணி. ஈரத்துணியைக் கழுத்தில் சுற்றி சத்தமில்லாமல் அறுப்பது காங்கிரசின் வழிமுறை. சத்தம் போட்டதனால் இப்போதைக்குக் கத்தியைப் பிடித்த கை கொஞ்சம் இறங்கியிருக்கிறது. நம் கழுத்தில் சுற்றிய ஈரத்துணி இன்னும் இறங்கவில்லை - மறந்துவிட வேண்டாம்.

• சூரியன்

# விஜயகாந்தின் அரசியல்

# கவர்ச்சி பாதி காவி பாதி கருப்புப் பணம் மீதி

ஓட்டுச் சீட்டு அரசியல்வாதிகள் இலவசமாக வேட்டி, சேலை வழங்குவது போல, தமிழக மக்களுக்கு தன்னுடைய தமிழ் சினிமா வசனங்களை எல்லாம் இலவசமாக மேடையில் வாரி இறைக்கிறார், ''கருப்பு எம்.ஜி.ஆர்.'', ''புரட்சிக்கலைஞர்'' விஜயகாந்த்.

''தமிழர்களுக்கு உதவும் அனைத்து நற்குணங்களுடன் விஜயகாந்தைப் படைத்த பிரம்மன் திருஷ்டி படாமல் இருக்கவே அவரைக் கருப்பாக படைத்து விட்டான். ஏற்கெனவே இருந்தவர் சிவப்பு எம்.ஜி.ஆர்.; இவர் கருப்பு எம்.ஜி.ஆர்.'' என்று விஜயகாந்தின் சினிமா வளர்ப்புப் பிராணிகள் குரைத்துக் கொண்டே சுற்றி ஓடிவர, கருப்பு எம்.ஜி.ஆர். மக்களுக்கு தரிசனம் தருகிறார்.

எழுதித் தந்த வசனங்களை மனப்பாடம் செய்து சினிமாவைப் போல் 'நடிப்பை' பிழிந்து மேடைகளில் வெளுத்துக் கட்டுகிறார்; சிவந்த கண்கள், அனல் பறக்கும் வசனங்கள், துடிக்கும் உதடுகள் என்று அச்சு பிசகாமல் சினிமா கதாநாயகன் போலவே அரசியல் மேடைகளில் சீறுகிறார், கருப்பு எம்.ஜி.ஆர்.

''மாத்தி மாத்தி ஓட்டுப் போடறீங்க, நீங்க ஓட்டுப் போடறவங்க என்ன பண்றாங்க? சபையை நடத்தவிடாமல் ரகளைதான் பண்றாங்க. மந்திரிப் பதவிக்கு அடிச்சிக்கிறாங்க. ஓட்டுப் போட்ட மக்களுக்காகவா? இல்லை, தங்களுடைய சுயலாபத்துக்காகவா? தஞ்சாவூர் விவசாயி எலிக்கறி தின்னானே, அவங்களுக்கு நல்லது பண்ணனும்னு மத்திய அமைச்சரவையில் வேளாண்மைத்துறையை யாராவது கேட்டாங்களா? அல்லது காவிரிப் பிரச்சினையை தீர்க்கனும், ஜனங்க குடிநீர் பிரச்சினையை தீர்க்கனும்னு நீர்வளத் துறையைக் கேட்டாங்களா? எல்லாம் சுய லாபத்துக்காக வருமானம் வரும் துறைகளைக் கேட்டு வாங்கினாங்க. அரசியல் தெரியாதவர்கள், அரசியல் பக்கம் வராதவர்கள் ஜெயிச்சு எம்.பி.யாக, மந்திரியாக வருகிறார்கள். ஏன், தேர்தலில் ஜெயிக்காமலேயே மந்திரி ஆகியிருக்கிறார்கள்'' என்று கனலைக் கக்குகிறார். ''நான் அரசியல் வேண்டாம்னு சொல்றவன் இல்லை. ஆனா வந்துட்டா, ஊழல் இல்லாத நல்ல ஆட்சியா கொடுக்கனும்'' என்று மிரட்டுகிறார்.

மேலும், ஆண்டாண்டு காலமாய் நிலவும் சாதிய ஒடுக்குமுறைகளுக்கு அரை நொடியில் தீர்வு சொல்கிறார். ''செருப்பு தைக்கும் தொழிலாளியான ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவுக்கே ஜனாதிபதியாக வரமுடிந்தது. அவரது தொழிலைத் தாழ்வாகவோ, தன்னை தாழ்த்தப்பட்டவராகவோ அவர் நினைக்கலே; இப்போதும் நான் தாழ்த்தப்பட்டவன், ஒடுக்கப்பட்டவன்னு யாரும் சொல்லிக்கிறதை நான் ஒத்துக்க மாட்டேன். மற்ற ஜாதிக்காரர்கள் எப்படித் தங்களை உயர்வாக நினைக்கிறாங்களோ, அதுபோலவே இவங்களும் தன்னை உயர்வாக நினைச்சுக்கனும்'' என்கிறார். அதாவது, ஆதிக்க சாதியினரிடம் உதை வாங்கும் தாழ்த்தப்பட்டவர்கள் தமிழ் சினிமாவைப் போல அப்படியே கனவுக் காட்சிக்குத் தாவி, உதை கொடுத்தவரின் மகளுடன் 'டுயட்' பாடவேண்டும். பழிக்குப் பழி! சாதிய ஒடுக்குமுறைக்கு கருப்பு எம்.ஜி.ஆர். கூறும் அரசியல் தீர்வு இதுதான்!

அடுத்து, ''ஊழலுக்கு எதிராக என்ன மாதிரி ஆயுதத்தை எடுக்கப் போறீங்க?'' என்று ஜூனியர் விகடன் கேள்விக்கு ''அது தன்னால நடக்கும் பாருங்களேன். என்ன ஆயுதம்னு இப்ப நான் சொன்னா, அதனால பல பிரச்சினைகள்(?) வரும். நானும் ஒரு கட்சியைத் தொடங்கி, கட்சி வலுவடையும் போதுதான் எதிர்ப்புகளைச் சமாளிக்கிற பலம் எனக்கு வரும். அதுக்கு முன்னால அந்த ஆயுதத்த நான் சொல்லிட்டா, எல்லாரும் சுதாரிச்சிக்குவாங்க(!)'' என்கிறார். இவையெல்லாம் பழைய 'டப்பிங்' தெலுங்குப்பட வசனங்கள். 'ரிவால்வர் ரீட்டா', 'கன்பைன் காஞ்சனா' போன்ற பழைய கௌபாய் படங்களிலிருந்து 'சுட்ட' வசனங்களைத்தான் அரசியல் சந்தையில்


படிப்பகம்

www.padippakam.com

புதிதாக கடைவிரிக்கிறார், கருப்பு எம்.ஜி.ஆர்.

இதில் கூத்து என்னவென்றால் இவ்வாறான 'அதிரடி அரசியல் கருத்துக்களை'ப் பேசுவதால் ''நான் நிறைய நெருக்கடிகளைச் சந்திச்சுட்டேன்... சந்திச்சுக்கிட்டு இருக்கிறேன்'' .ன்று தமிழர்களிடம், குறிப்பாக பெண்களிடம் ''பாவம் விஜயகாந்த்'' என்ற அனுதாபத்தைத் தேடுகிறார்.

''நான் ஆணையிட்டால், அது நடந்து விட்டால்'' என்பது எம்.ஜி.ஆர். 'பார்முலா'. இப்போது இதையே தனது அரசியல் சரக்காக்கி ஆர்ப்பாட்டம் செய்கிறார், கருப்பு எம்.ஜி.ஆர்.



ஏழை, எளிய மாணவர்களுக்கு உதவி வழங்கும் ''வள்ளல்'' விஜயகாந்த்: கவர்ச்சிவாத அரசியல்.

''உரிய பொறுப்புகள் (முதல்வர் பதவி) வந்தால் நிஜ வாழ்க்கையிலும் 'ரமணா' அவதாரம் எடுப்பேன். இந்தக் காலகட்டத்துல எந்தெந்த மட்டத்துல என்னென்ன ஃபிராடு நடக்குதுனு மத்தவங்களவிட எனக்கு நல்லாவே தெரியும். (ஏனெனில் இவரே வருமானத்தை குறைத்துக் காட்டி வரி ஏய்ப்பு செய்யும் கருப்புப் பண பேர்வழிதானே!). அதை எப்படியெல்லாம் தடுக்கலாம்னு நிறையவே யோசிக்கிறேன். லஞ்சம் கொடுப்பவர்கள் இருந்தாதானே அதை வாங்குறவங்க பெருகுவாங்க; லஞ்சம் கொடுக்கிறதையே நிறுத்திட்டா... அதுதான் என்னுடைய பிளான்'' என்று கூறி, எம்.ஜி.ஆர்.யிசம் போன்று இன்னொரு பாசிச கோமாளியிசம்தான் ''ரமணாயிசம்'' என்று வாக்குமூலம் தருகிறார்.

தமிழ் சினிமாவில் வரும் ஆபாச சரவெடி சிரிப்புக் காட்சிகளை விஞ்சும் கருப்பு எம்.ஜி.ஆரின் ரமணாயிசம் 'ஒரிஜினல்' எம்.ஜி.ஆரின் அண்ணாயிசத்தை விட அருவருப்பானது! ஆபத்தானது! கருவிலேயே அழிக்க வேண்டியது! இதற்கான ஆதாரங்களை எங்கேயும் தேடவேண்டியதில்லை. விஜயகாந்தின் பணவெறி, பதவிவெறி, சாதிவெறி, மதவெறி மற்றும் சுய விளம்பர போதையே இதற்கு சாட்சி!

விஜயகாந்த் தமிழ் சினிமாவில் காலடி எடுத்து வைத்து 30 ஆண்டுகள் ஆகின்றன. இதே காலக்கட்டத்தில் தமிழகத்தின் விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், பெண்கள், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் மீது எம்.ஜி.ஆர்., கருணாநிதி, ஜெயலலிதா அரசுகள் ஏராளமான அடக்குமுறைகளை ஏவியுள்ளன. குறிப்பாக, கடந்த பத்து ஆண்டுகளாக விஜயகாந்த் தமிழகத்தின் நட்சத்திர நடிகராக உச்சத்தில் இருந்தபோது, மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர் தமது பிரச்சினைக்காக நெல்லையில் ஆட்சித் தலைவரிடம் மனுக் கொடுக்கச் சென்றனர். அவர்கள் மீது ஆட்சியாளர்கள் அடக்குமுறையை ஏவிப் படுகொலை செய்ததற்கு எதிராக இவர் எதிர்ப்பு அறிக்கைக் கூட வெளியிட்டதில்லை.

ஜெயலலிதாவின் முந்தைய ஆட்சியின்போது நடந்த லஞ்ச - ஊழல் மோசடிகள், அதிகாரமுறைகேடுகள், அடக்குமுறைகள் மற்றும் கருணாநிதி ஆட்சியில் சக திரைப்பட தொழிலாளர்கள் மீது நடந்த போலீசு அடக்குமுறைகள், பட்டினியில் திரைப்படத் தொழிலாளர்கள் அடுத்தடுத்து தற்கொலை செய்து கொண்டது - என எதற்குமே இந்த 'புரட்சிக்கலைஞர்' வாய் திறக்கவேயில்லை. வாச்சாத்தி, சின்னாம்பதி முதல் சிதம்பரம் வரை ஏழை உழைக்கும் பெண்கள் மீது போலீசு நடத்திய தாக்குதல்கள் - வன்புணர்ச்சிகள் போன்ற ஆயிரக்கணக்கான கொடுமைகளுக்கு எதிராக சிறு துரும்புக் கூட அசைக்காதவர்தான் இந்த கருப்பு எம்.ஜி.ஆர்.

ஏழைகள் மீதும், தொழிலாளர்கள் மீதும் விஜயகாந்த் காட்டும் கரிசனம் நிழல் உலகோடு (சினிமாவோடு) முடிந்து விடுகிறது. நிஜத்தில், அவர் ஒரு திடீர் பணக்காரர்; பொறியியல் கல்லூரியைத் திறந்து வைத்துக் கொண்டு, தனியார்மயம் - தாராளமயத்துக்குத் துதிபாடும் நவீன முதலாளி.

சென்னை - மதுரை - கோவை என்று பல முக்கிய நகரங்களில் ஏராளமான சொகுசு பங்களாக்கள், பலமாடி வணிக வளாகங்கள், திருமண மண்டபங்கள், பண்ணை நிலங்கள், சொந்தமாக சூதாட்ட கிளப்புகள், பெட்ரோல் நிலையங்கள், பிறமொழி மற்றும் தமிழ் திரைப்படங்கள் தயாரிப்பு - விநியோக உரிமை நிறுவனங்கள், மச்சான், மனைவி, மகன்கள் பெயரில் ஏராளமான முதலீடுகள், கணக்கில் காட்டாத கருப்புப் பணம் என்று பணத்திலேயே புரளும் இந்த கோமான் திடீரென தமிழர்களின் மீது கரிசனம் வந்து உருண்டு புரள்வது எதற்கு?

கருணாநிதி குடும்பம், ராமதாசு குடும்பம் போல தனது குடும்பத்தையும் ''முன்னேற்றுவதற்கு''த் தான் அவர் அரசியலில் குதிக்கிறார். தமிழக மக்களிடம் தனக்குள்ள சினிமா கவர்ச்சி, செல்வாக்கு; ஓட்டுக் கட்சிகள் மீது தமிழக மக்களுக்குள்ள வெறுப்பு, தன்னைச் சுற்றியுள்ள பிழைப்புவாதிகளின் கூட்டம் — இவற்றையெல்லாம் மூலதனமாக வைத்துதான் அரசியல் வியாபாரத்தைத் தொடங்கியிருக்கிறார், அவர். இந்த வியாபாரத்தை முற்போக்காகக் காட்டத்தான் ''தமிழன்'', ''ஊழல் எதிர்ப்பு'' எனச் சவடால் அடிக்கிறார்.


திராவிட அரசியல் கட்சி தலைவர்கள் அனைவரும் ஊழல் பேர்வழிகள் எனச் சாடும் இந்த உத்தமர், குறைந்த பட்சம் சினிமாவில் தான் வாங்கும் சம்பளத் தொகையைப் பகிரங்கமாக அறிவிப்பாரா? அதில் கருப்பு எவ்வளவு, வெள்ளை எவ்வளவு என்று மேடை


படிப்பகம்

யில் அறிவிக்கத் தயாரா? அரசியல் நடத்தும் திராவிட ஓட்டுச் சீட்டு அரசியல்வாதிகளை குறி வைத்துத் தாக்கும் இவர், தன்னுடைய நெற்றியில் திருநீறு அணிவது என்ற பெயரில் இந்துமதச் சின்னத்தை பொறித்துக் கொண்டுதான் வெளியில் வலம் வருகிறார். இந்து மதத்தையும், சாதிவெறியையும் பிரிக்க முடியாது என்பது இந்த 'புரட்சிக்கலைஞருக்கு'த் தெரியாதா!

பாப்பாபட்டி, கீரிப்பட்டியில் தாழ்த்தப்பட்டோர், தன்னிச்சையாக பஞ்சாயத்துத் தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்யக் கூட முடியவில்லை. 'மேல்சாதி' இந்துக்களான கள்ளர் சாதி வெறியர்களின் இந்த ஒடுக்குமுறையை எதிர்த்து அம்பலப்படுத்திப் பேச வக்கற்ற விஜயகாந்த், 'நரசிம்மா' என்ற தன்னுடைய திரைப்படத்தில், 'இந்தியாவில் முசுலீம் ஜனாதிபதியாக முடிகிறது, கவர்னராக முடிகிறது; கிரிக்கெட் கேப்டனாக முடிகிறது; பாகிஸ்தானில் ஓர் இந்து, வார்டு பிரதிநிதியாகக் கூட வர முடியவில்லையே, ஏன்?'' என்று ஆர்.எஸ்.எஸ்.-இன் அவதூறுகளையே வசனமாகப் பேசி, அப்பாவி முசுலீம்களிடம் தனது வீரத்தைக் காட்டுகிறார். தேசப்பற்று கொப்பளிக்கும் தன்னுடைய படங்களில் எல்லாம் முசுலீம் தீவிரவாதிகளை மட்டும் வில்லனாகக் காட்டுவதன் மூலம், ஆர்.எஸ்.எஸ். கும்பலின் இந்து மதவெறி பாசிசத்துக்கு ஒத்து ஊதுகிறார்.

ஆர்.எஸ்.எஸ். குஜராத்தில் நடத்திய முசுலீம் இனப்படுகொலை உலகத்தையே உலுக்கிப் போட்டதைப் பச்சைக் குழந்தைகளிடம் கேட்டால் கூட சொல்லும். ஆனால், திரைப்படங்களில் அநியாயத்தைத் தட்டிக் கேட்பவராக அரிதாரம் பூசிக் கொண்டு வலம் வந்த விஜயகாந்த், ''அங்கே என்ன நடக்கிறதென்றே அப்போது சரியாத் தெரியவில்லை. அதனால்தான் குரல் கொடுக்கவில்லை'' என்று இப்போது பத்திரிகைக்குப் பேட்டியளித்து, ஆர்.எஸ்.எஸ்.-ஐக் குற்றம் சுமத்துவதில் இருந்து நழுவிக் கொள்கிறார். ''எவன் தாலி அறுந்தால் நமக்கென்ன? எவன் குடி கெட்டால் நமக்கென்ன?'' என்று சினிமா போதையில் மிதந்து கிடக்கும் இந்தச் சுயநலப்பேர்வழி தமிழன், தமிழன் என்று ஒப்பாரி வைத்துக் கொண்டு, ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்குக் காவடி தூக்கும் பார்ப்பனிய விசுவாசி என்பதைத்தான் இவை நிரூபிக்கின்றன.



கட்சி தொடங்குவதற்கு முன்பே, தன்னைப் பாதுகாக்க விஜயகாந்த் உருவாக்கியுள்ள தொண்டர் படையின் ஒரு பிரிவு: ஓட்டுப் பொறுக்கி அரசியலுக்கே உரிய ''பந்தா''.

''ஆட்சியைப் பிடிக்கிறதுக்காகத் தான் இந்த அரசியல்வாதிங்க (காங்கிரசு மற்றும் கம்யூனிஸ்டுகள்) பா.ஜ.க.வை மதவாதக் கட்சிங்றாங்க. தங்களை மதவாதக் கட்சின்னு அவங்க (பி.ஜே.பி) சொல்லியிருக்காங்களான்னு(!) எனக்கு தெரியாது'' எனக் கூறி, இந்து மதவெறிக் கட்சியான பி.ஜே.பி.க்கு மதச்சார்பற்ற முத்திரைக் குத்தப் பார்க்கும் பித்தலாட்ட பேர்வழிதான் விஜயகாந்த். ''உயிர் தமிழுக்கு'' என்று அடுக்குமொழியில் ஊரை ஏமாற்றிக் கொண்டு இந்தி மொழித் திணிப்பை ஆதரிக்கும் கருங்காலி! ''அப்போது நடந்த மொழிப் போராட்டத்தில் (இந்தி மொழித் திணிப்பு எதிர்ப்பு போராட்டம்) கலந்து கொண்ட என்(!) போன்ற லட்சக்கணக்கான இளைஞர்களின் எதிர்காலமே இருண்டு போய்விட்டது'' என்று அவதூறு பரப்பும் தமிழின விரோதி!

கால் நூற்றாண்டாக மதுரை அலங்காநல்லூர் சோதிடன் சுந்தரானந்தம் என்பவரின் பின்னால் திரிந்து கொண்டு நாள் - நட்சத்திரம் பார்த்து திரைப்படம் தயாரிப்பு என்ற பெயரில் நடிகைகளின் மேல் உருண்டு கிடந்த இந்த 'புரட்சிக்கலைஞர்', இப்போது தமிழகத்தின் முதல்வர் பதவி நாற்காலியை மோகித்து பெங்களூர் சோதிடன் 'பாபா'வின் சொற்படி ஆடிக் கொண்டிருக்கிறார்.

''நேற்றைய வல்லரசு! இன்றைய பேரரசு!! நாளைய தமிழரசு!!!'' என்று தமிழகம் முழுக்க சுவரொட்டிகளை ஒட்டி நாறடித்து, நினைத்த நேரத்தில் அவசரத்துக்கு ஒதுங்கும் திறந்தவெளி கழிப்பிடம் போல் தமிழகத்தை தினவோடு பயன்படுத்துகிறார். ''2006-ஆம் ஆண்டு நடக்கவிருக்கும் சட்டமன்ற தேர்தலுக்குப் பின் தமிழகத்தில் பதவிப் பிரமாணம் எடுத்தே தீருவது என்ற இலக்கை நோக்கை விரைந்து கொண்டிருக்கிறார் கேப்டன்'' என்று துடப்பகட்டைக்கு பட்டுக் குஞ்சம் கட்டும் 'மாமா' வேலையில் இறங்கிவிட்டன பார்ப்பன பத்திரிகைகள்.

சினிமாவில் இதுநாள்வரை புரட்யூசர் செலவில் 'புரட்சி' செய்து கொண்டிருந்த கருப்பு எம்.ஜி.ஆர். இப்போது ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன கும்பலின் தயவில் தமிழர்களின் தலையை மொட்டை அடிக்க நாள் குறித்து விட்டார். அதற்காக, தன் மச்சான், மனைவி மற்றும் ரசிகர்கள் பட்டாளம் என்ற கூலிப்படைகளோடு கிளம்புகிறார். மீண்டும், இன்னொரு சுனாமி வந்தால் கூட தமிழகத்தை காப்பாற்றி விடலாம். ஆனால், கருப்பு எம்.ஜி.ஆர். என்ற பெயரில் இந்த சாக்கடையை தமிழகத்தில் நுழையவிட்டால் வரலாறு நம்மை மன்னிக்காது! ஏதுமறியாத நமது தமிழகத்தின் குழந்தைகள் நம்மைப் போலவே மீளாத கொடுமையில் சிக்கி மிகப் பெரும் இருண்ட ஆட்சியில் உழலும் அபாயம் ஏற்படும்! எனவே, இப்போதே நம் பலம் அனைத்தையும் ஒன்று திரட்டி கறுப்பு எம்.ஜி.ஆர். என்ற பெயரில் படையெடுக்கும் இந்தக் கழிசடை - காவிக் கூட்டத்தை அதன் கருவிலேயே நாம் அழித்தொழிக்க வேண்டும்.

● பச்சையப்பன்

www.padippakam.com

# காரல் மார்க்ஸ்:
# இன்றைய காலத்திற்கேயுரிய வழிகாட்டி

**கை**யில் நயாபைசா இல்லாமல் புலம் பெயர்ந்து வந்து இலண்டன் மாநகரில் தஞ்சம் புகுந்த ஒரு அகதியை வசைபாடுவதற்கும், அவர் மீது பழி தூற்றுவதற்கும் இரண்டு முழுப் பக்கங்களைச் செலவிட்டிருந்தது ஒரு பிரிட்டிஷ் வலதுசாரிப் பத்திரிகையின் சென்ற வார இதழ். 'அகதி' என்ற சொல்லைக் கேட்டாலே வலதுசாரிகளுக்கு உடம்பெல்லாம் எரியும் என்பதால் இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லைதான். எனினும் தாக்குதலுக்கு ஆளான இந்த அகதி இருக்கிறாரே, அவர் தற்போது உயிருடன் இல்லாதவர். அதாவது, 1883-இலேயே இறந்து விட்டவர்.

ஆம்! 'மார்க்ஸ் எனும் அரக்கன்' என்பதே மேற்படி கட்டுரையின் தலைப்பு. பி.பி.சி. 'ரேடியோ - 4' அலைவரிசை நடத்திய கருத்துக்கணிப்பில் அதன் நேயர்கள் தங்கள் அபிமான சிந்தனையாளராக கார்ல் மார்க்ஸைத் தெரிவு செய்ததுதான் இந்த வெறிகொண்ட எதிர்வினைக்குக் காரணம்.

''ஸ்டாலின், மாவோ, போல்பாட், முகாபே போன்ற கொலைகாரச் சீடர்களை உருவாக்கிய ஒரு மனிதனை உலகின் தலைசிறந்த தத்துவஞானியாக எப்படித் தேர்ந்தெடுக்க முடியும்?'' - இது அந்தப் பத்திரிகை எழுப்பியிருக்கும் கேள்வி.

இந்த அதிர்ச்சியும் ஆச்சரியமும் புரிந்து கொள்ளத் தக்கதே. 15 ஆண்டுகளுக்குமுன், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிசம் வீழ்ச்சியடைந்த பின், ''மார்க்ஸின் கதை இதோடு முடிந்தது'' என்றொரு கருத்து பொதுவாகப் பரவியிருந்தது. ''அவர் செத்துவிட்டார், லண்டன் கல்லறையில் எஞ்சியிருக்கும் அவரது உடலின் எச்சங்கள் பெர்லின் சுவரின் இடிபாடுகளுக்குக் கீழ் நிரந்தரமாகப் புதைக்கப்பட்டு விட்டன. யாரும் அவரைப் பற்றிச் சிந்திக்கத் தேவையில்லை; அவரது சிந்தனைகளை இனி படிக்கவே தேவையில்லை'' என்பதே அந்தப் பொதுக் கருத்து.

பனிப்போர் முடிவுக்கு வந்த அந்த காலகட்டத்தில் ஃபிரான்சிஸ் ஃபுகுயாமா கூறினார், ''நாம் கடந்து சென்று கொண்டிருப்பது இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட கட்டமல்ல; நாம் காண்பது வரலாற்றின் முடிவு. மனித குலத்தின் சித்தாந்த வளர்ச்சிக்கே எல்லை இதுதான். இத்துடன் முடிந்தது'' இது அவரது பிரகடனம்.

வரலாறோ திரும்பியது; ஒரு வன்மத்துடன் விரைவிலேயே திரும்பியது. 1998 ஆகஸ்டில் ரசியாவின் பொருளாதாரம் கற்பூரமாய்க் கரையத் தொடங்கியது. ஆசிய நாடுகளின் நாணய மதிப்புகுள் தலைகுப்புறக் கவிழ்ந்தன. உலகச் சந்தை முழுதும் பீதி பரவத் தொடங்கியது.

''உலக முதலாளித்துவம் வெற்றிக் கொடி நாட்டி பத்தாண்டுகள் கூட ஆகவில்லையே! அதற்குள்ளாகவா நாம் நெருக்கடியில் சிக்கிவிட்டோம்?'' என்று தனது அதிர்ச்சியை வெளியிட்டது லண்டனின் ''ஃபைனான்சியல் டைம்ஸ்'' பத்திரிகை. அந்தக் கட்டுரையின் தலைப்பென்ன தெரியுமா? ''டாஸ் காபிடலை (மார்க்சின் ''மூலதனம்'' நூலை) இன்னொரு முறை புரட்டிப் பார்ப்போம்!''

முதலாளித்துவ அமைப்பினால் பெரிதும் ஆதாயம் அடைந்தவர்கள் கூட ''நம்முடைய வண்டி தொடர்ந்து ஓடுமா?'' என்ற கேள்வியை எழுப்பத் தொடங்கினார்கள்.

முதலாளித்துவ சமூகம் சந்திக்கும் நெருக்கடிகளை முன்னறிந்து கூறிய பேராசான் காரல் மார்க்ஸ்.



''தானும் தன்னையொத்த முதலாளிகளும் தங்களது மந்தை மனப்பான்மையை கட்டுப்படுத்திக் கொள்ளாவிட்டால், இந்த மந்தையின் காலடியில் எல்லோரும் மிதிபட்டுச் சாகவேண்டியதுதான்'' என்று எச்சரிக்கை செய்கிறார், மிகப் பெரும் கோடீசுவரனும் ஊகச் சந்தை வணிகனுமான ஜார்ஜ் சோரோஸ்.

''முதலாளித்துவ அமைப்பைப் பற்றி நம்முடைய செவ்வியல் பொருளாதார வல்லுனர்கள் கூறும் சமநிலைக் கோட்பாட்டைக் காட்டிலும் சிறந்த முறையிலான ஆய்வை 150 ஆண்டுகளுக்கு முன்னரே மார்க்சும் எங்கெல்சும் வழங்கியுள்ளனர் என்று நிச்சயமாக என்னால் கூற முடியும்.''

''அச்சுறுத்தும் வகையில் கூர்மையான அவர்களது ஊகங்கள் உண்மையாகாமல் போனதற்குக் காரணம் இருக்கிறது. ஜனநாயக நாடுகளில் (கம்யூனிச அபாயத்தைத் தடுக்க) எதிர்நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட அரசியல் தலையீடுகள்தான் அதற்குக் காரணம். வரலாறு நமக்குப் பாடம் கற்பித்திருக்கிறது. அந்தப் பாடங்களிலிருந்து கூடத் தவறான முடிவுகளுக்கு மட்டுமே நாம் வருகிறோம். இன்னொரு முறை இதே தவறை நாம் செய்யும் அபாயம் இருக்கிறது. இந்த முறை அபாயம் கம்யூனிசத்திடமிருந்து வரவில்லை - சந்தை கடுங்கோட்பாட்டு வாதம்தான் இன்று நமக்கெதிரான அபாயமாகும்.''

இவையெல்லாம் உலகின் மிகப் பெரும் ஊகச்சந்தை வணிகனான ஜார்ஜ் சோரோஸ் வெளியிட்டுள்ள கருத்துக்கள்


'நியூயார்க்கர்' பத்திரிகையின் வணிகத்துறைச் செய்தியாளர் ஜான் காசிடி, ஒரு முதலீட்டு வங்கியின் முதலாளியுடன் பேசிக் கொண்டிருந்தாராம். அந்த உரையாடலைப் பற்றி அக்



படிப்பகம்

www.padippakam.com

டோபர் 1997-இல் எழுதினார். ''வால் தெருவில் (நியூ யார்க்கின் பங்குச் சந்தைத் தெரு) நான் எந்த அள விற்கு நேரத்தைச் செலவிடுகிறேனோ, அந்த அளவிற்கு மார்க்ஸ் கூறியது சரிதான் என்பதை நான் புரிந்து கொள் கிறேன். முதலாளித் துவத்தை ஆய்வு செய்வதற்கு மார்க்ஸ் மேற் கொண்ட முறை தான் சரியானது என்பதில் எள்ளள வும் சந்தேகமில்லை'' என்று சொன்னா ராம் அந்த வங்கி முதலாளி.



அமெரிக்க சந்தையில் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும் கார்கள்: முதலாளித்துவ அராஜக உற்பத்தி ஏற்படுத்தும் தீராத தலைவலி.

மார்க்சின் நூல்களை இதுவரை படித்திராத செய்தியாளர் காசிடி, ஆவலை அடக்கமாட்டாமல் முதன்மு றையாக மார்க்சைப் படித்தாராம். ''உல கமயமாக்கம், ஏற்றத்தாழ்வுகள், அரசி யல் ஊழல், ஏகபோகமயமாதல், தொழில்நுட்ப வளர்ச்சி, உயர் கலாச்சா ரத்தின் வீழ்ச்சி, தொடர்ந்து உயிர்த் துடிப்பை இழந்து வரும் நவீன வாழ்க் கையின் தன்மை - இவை பற்றியெல் லாம் ஆணி அடித்தாற்போலப் பேசும் மார்க்சின் எழுத்துக்களைக் கண்டேன். இதே விசயங்களைத்தான் இன்றைய பொருளாதார வல்லுனர்கள் ஏதோ புதிய பிரச்சினைகளாகக் கருதி எதிர்கொண்டு வருகிறார்கள். சில நேரங்களில், மார்க்சின் கால்தடம் பதிந்த பாதையில்தான் செல்கி றோம் என்பதை அறியாமலேயே அந்தப் பாதையிலும் நடக்கிறார் கள்'' - இவை மார்க்சைப் படித்த பின் நியூயார்க்கர் இதழில் காசிடி எழுதிய கருத்துக்கள்.

முதலாளி வர்க்கம் இன்னும் சாகவில்லை. மார்க்சும்தான் சாக வில்லை. முதலாளித்துவத்தைப் பற்றிய அவரது கணிப்புகளில் சில நிறைவேறாமல் போயிருக்க லாம்; அவர் தவறிழைத்திருக்க லாம். ஆனால், முதலாளித்துவம் என்ற மிருகத்தின் இயல்பை வெளிக் கொணர்ந்து காட்டிய அவரது ஆய்வின் கூர்மை இருக் கிறதே - அந்த ஊடுருவிச் செல் லும் கூர்மை - அது அவரது கணிப்பில் நேர்ந்த சில பிழைக ளையெல்லாம் புறந்தள்ளிக் கடந்து சென்றுவிட்டது.


கம்யூனிஸ்டு அறிக்கையில் அவர் எழுதினார்: ''ஓயாது ஒழியாது உற்பத் தியில் ஏற்படும் புரட்சிகர மாற்றங்க ளும், சமூக உறவுகள் யாவும் இடைய றாது அமைதி குலைதலும், முடிவே இல்லாத நிச்சயமற்ற நிலைமையும், கொந்தளிப்பும் முதலாளித்துவ சகாப் தத்தை அதற்கு முந்தைய எலலா சகாப் தங்களிலிருந்தும் வேறுபடுத்திக் காட் டுகின்றது.''

சமீப காலம் வரையிலும் இங்கி லாந்தில் பலர் தம் வாழ்நாள் முழுவ தும் ஒரே வேலையில் தொடர்ந்தார் கள்; அல்லது ஒரே நிறுவனத்தில் தொடர்ந்து பணியாற்றினார்கள். ஆனால் இன்று? அப்படி யாரையாவது நாம் காட்ட முடியுமா? மார்க்ஸ் கூறி யதைப் போல, ''திடப்பொருட்கள் எல்லாம் காற்றில் கரைகின்றன'' - அல்லவா?

உண்மையில் மனி தனுக்கு மட்டுமே உரியவையாக இருக்கும் அனைத் தும் சரக்காக, உயி ரற்ற சடப்பொருளாக உறைந்து போவ தையும், அந்தச் சரக் கானது, பேராற்ற லையும் உயிர்த்து டிப்பையும் பெற்று, தன்னை உற்பத்தி செய்த மனிதர்க ளையே கொடுங்கோன்மைக்கு ஆளாக் குவதையும் தனது தலைசிறந்த படைப் பான மூலதனத்தில் மார்க்ஸ் நிரூபித் துக் காட்டுகிறார்.

நம்முடைய வாழ்க்கையை ஆளும் சக்திகளைப் பற்றியும், அவை நம் வாழ் வில் தோற்றுவிக்கும் நிச்சயமின்மை, அந்நியமாதல், சுரண்டல் போன்றவை பற்றியும் மார்க்ஸ் வழங்கியுள்ள சித்த ரிப்பு இன்னும் எதிரொலித்த வண்ணம் தான் இருக்கிறது; அது உலகின் கவ னத்தை மீண்டும் ஈர்த்தே தீரும். பி.பி.சி. வானொலியின் கருத்துக் கணிப்பு காட்டும் உண்மை இதுதான்.

பெர்லின் சுவரின் இடிபாடுக ளுக்கு அடியில் மார்க்ஸ் புதைக் கப்பட்டு விட்டதாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இல்லை. இப்பொழுதுதான் தனக்குரிய உண்மையான முக்கியத்துவத்து டன் அவர் எழுந்துவரப் போகி றார். இதனைப் புரிந்து கொள் ளவோ சகித்துக் கொள்ளவோ முடியாமல் வலதுசாரிப் பத்திரி கைகள் என்னதான் ஊளையிட் டாலும், 21-ஆம் நூற்றாண்டின் செல்வாக்குமிக்க சிந்தனையாள ராக உருவெடுக்கப் போகிறார் கார்ல் மார்க்ஸ்.




— ஃபிரான்சிஸ் வீன்
*('கார்ல் மார்க்ஸ்' என்ற வாழ்க்கை வரலாற்று நூலின் ஆசிரியர்.)*

**லண்டனிலிருந்து வெளிவரும் கார்டியன் பத்திரிகையில் வெளியான கட்டுரை. 'இந்து' நாளேட்டிலிருந்து (22.7.05) மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.**

www.padippakam.com

## அயோத்தி ராமர் கோயில் தாக்குதல்

# வினை விதைத்தால் தினை அறுக்க முடியுமா?

உ.பி. மாநிலம் - அயோத்தியில் பாபர் மசூதி வளாகத்தினுள் அமைந்துள்ள ''ராமர் கோவிலின்'' மீது கடந்த ஜூலை மாதம் 5-ஆம் தேதி நடந்த தாக்குதலின் பொழுது, ஐந்து தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்; இவர்கள் தவிர, சுற்றுலா வழிகாட்டி ஒருவரும், சாமி கும்பிட வந்த பெண் ஒருவரும் இத்தாக்குதலின்பொழுது இறந்து போய்விட்டதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ராமர் கோவில் என அழைக்கப்படும் அந்தக் கூடாரத்திற்கு சேதம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லையென்றாலும், முசுலீம் தீவிரவாதத்தை எதிர்த்துக் கூச்சல் போடும் அனைவரையும் இத்தாக்குதல் உலுக்கிப் போட்டிருக்கும்.

மற்ற கோவில்களில் ''விசுக்'' கென்று நுழைவதைப் போல, பாபர் மசூதி வளாகத்தினுள் உள்ள ராமர் கோவிலுக்குள் மேல்சாதியினர் கூட எளிதாக நுழைந்துவிட முடியாது. மைய அரசும், உ.பி. மாநில அரசும் மூன்று அடுக்கு பாதுகாப்பை இக்கோயிலுக்கு வழங்கியிருக்கின்றன.

''சிவப்பு வளையம்'' என அழைக்கப்படும் ராமர் கோயிலைச் சுற்றியுள்ள பகுதி, மைய அரசின் ரிசர்வ் போலீசு படையைச் சேர்ந்த 200 போலீசார் மற்றும் விரைவு அதிரடிப்படையைச் சேர்ந்த 30 இராணுவச் சிப்பாய்களால் பாதுகாக்கப்படுகிறது;

''மஞ்சள் வளையம்'' என அழைக்கப்படும் கோயிலை அடுத்துள்ள பகுதி, உ.பி. மாநில அரசின் பிரதேச ஆயுதப் படையைச் சேர்ந்த 1,200 போலீசாரால் பாதுகாக்கப்படுகிறது.

''பச்சை வளையம்'' என அழைக்கப்படும் வெளிப்புறப் பகுதி உ.பி. மாநில போலீசால் பாதுகாக்கப்படுகிறது. மேலும், பாபர் மசூதி வளாகம் முழுவதையும் கண்காணிப்பதற்காக 13 காவல் கோபுரங்களும் நிறுவப்பட்டுள்ளன.

இத்துணை பாதுகாப்பையும் மீறி உள்ளே நுழைந்த ஐந்து தீவிரவாதிகளுக்கும், ஆயுதப் படையினருக்கும் இடையே ஒன்றரை மணி நேர துப்பாக்கிச் சண்டை நடந்திருப்பதோடு, 'ராமர் கோயில்' கருவறைக்கு 50 அடி தூரத்தில்தான் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆனால், பா.ஜ.க.வோ, குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாத கதையாக ''ராமர் கோவிலுக்குப் பாதுகாப்பு குறைவாக இருக்கிறது; அதனால்தான் தீவிரவாதிகள் உள்ளே புகுந்துவிட்டதாக''ப் புலம்புகிறது. இன்னும் சொல்லப்போனால், மைய - மாநில அரசின் புலனாய்வுப் பிரிவுகள் முன்கூட்டியே கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு, இத்தாக்குதல் திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

மேலும், இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் எந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள்? எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பது கூட இன்னும் ஆதாரபூர்வமாகத் தெரியவில்லை. சுட்டுக் கொல்லப்பட்ட 'தீவிரவாதிகள்' சுன்னத் செய்திருப்பதால் முசுலீம்கள் என்றும்; தாக்குதலுக்குப் பின் கண்டு எடுக்கப்பட்ட செல்போனை வைத்துக் கொண்டு, பாகிஸ்தானில் இருந்து இயங்கி வரும் லஷ்கர்-இ-தொய்பா தான் இத்தாக்குதலை நடத்தியிருப்பதாகவும் யூகங்களையே ஆதாரங்களாகப் புலனாய்வு அமைப்புகள் அறிவித்திருக்கின்றன.

இத்தாக்குதல் மூலம் இந்து - முசுலீம் மதக் கலவரத்தைத் தூண்டி விடுவதுதான் தீவிரவாதிகளின் நோக்கம் என காங்கிரசு, சி.பி.எம். உள்ளிட்ட 'தேசிய'க் கட்சிகள் கண்டுபிடித்திருக்கின்றன. தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதால், நிறைவேறாமல் போன அவர்களின் 'நோக்கத்தை' நிறைவேற்றி வைக்கும் பொறுப்பை, இத்தாக்குதலின் பின்னே பா.ஜ.க. கையில் எடுத்துக் கொண்டது. இன்னும் சொல்லப் போனால், இப்படியொரு தீவிரவாத சம்பவம் நடைபெறாதா என அக்கட்சி எதிர்பார்த்துக் கொண்டு இருந்தது என்பதுதான் உண்மை.

இதற்கு நிரூபணம் வேண்டும் என்றால், இத்தாக்குதல் நடந்தவுடனேயே ஆர்.எஸ்.எஸ். வெளியிட்ட அறிக்கையைப் படித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். நாடாளுமன்றத் தேர்தல் தோல்விக்குப் பின்னே கட்சிக்குள் நிலவி வரும் தேக்கநிலை; ஆர்.எஸ்.எஸ். பரிவார அமைப்புகளுக்குள் கொள்கை மோதல் என்ற பெயரில் நடந்து வந்த கோஷ்டி சண்டை - இவை எல்லாவற்றையுமே இத்தாக்குதல் தீர்த்து வைக்கும் காரணியாகி விட்டது என்றது, ஆர்.எஸ்.எஸ்.

''பாபர் மசூதி இடிக்கப்பட்ட நாள் தான் எனது வாழ்க்கையில் மிகவும் வேதனைக்குரிய நாள்'' என பாகிஸ்தானில் முதலைக் கண்ணீர் விட்ட அத்வானி, தாக்குதல் நடந்து முடிந்தவுடனேயே, ''ராமர் கோவிலை அதே இடத்தில் (பாபர் மசூதி வளாகத்தி

பாபர் மசூதி வளாகத்தினுள் ஆர்.எஸ்.எஸ். கும்பல் சட்டவிரோதமாகக் கட்டியுள்ள ராமர் கோவில்: இந்து ராஷ்டிரத்தின் குறியீடு.





படிப்பகம்

www.padippakam.com

னுள்) கட்டுவோம்'' எனக் கூறி, தனது இந்து மதவெறி விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார். பா.ஜ.க., ''இத்தாக்குதலுக்குத் தக்க பதிலடி கொடுப்போம்'' எனக் கூறி, தனது வானரப் படைகளை உசுப்பேற்றி விட்டது. பா.ஜ.க. சூசகமாகச் சொன்னதை, ராமஜென்ம பூமி நியாஸ் என்ற ''கஞ்சா சாமியார்கள்'' அமைப்பு, ''அயோத்தியில் இருந்த முசுலீம்கள் அனைவரையும் வெளியேற்ற வேண்டும்'' எனப் பச்சையாகச் சொன்னது. குஜராத் தவிர, நாடெங்கும் கடையடைப்பு, ரயில் மறியல் என நடத்தி, ஒரு பதட்டமான சூழ்நிலையை உருவாக்க முயன்றது, ஆர்.எஸ்.எஸ். கும்பல்.

ஆனால், 1990-களில் பா.ஜ.க.விற்கு ராமர் கைகொடுத்ததைப் போல, இந்த முறை கை கொடுக்கவில்லை. அவர்கள் அறிவித்திருந்த கடையடைப்புப் போராட்டம் அயோத்தியிலேயே பிசுபிசுத்துப் போனது. அயோத்தியில் அத்வானி தலைமையில் நடந்த கண்டனப் பொதுக் கூட்டத்திற்கு, உள்ளூர் மக்கள் ஒரு ஆயிரம் பேர் கூடத் திரண்டு வந்து ஆதரவு கொடுக்கவில்லை. அயோத்தியைச் சேர்ந்த மஹந்த் கியான்தாஸ் என்ற சாமியார், ''அவர்கள் மசூதியை இடிக்காமல் இருந்திருந்தால், தீவிரவாதிகள் அயோத்தி பக்கம் வந்திருக்க மாட்டார்கள்'' எனக் கூறி, உள்ளூர் மக்களின் மனோநிலையைப் பிரதிபலித்தார்.

இத்தாக்குதல் பற்றி ஒரு ''இந்து'' சாமியார் வெளிப்படுத்தியிருக்கும் நேர்மையான, நியாயமான கருத்தை, மதச்சார்பற்ற ஓட்டுக் கட்சிகளும் கூறியிருக்க வேண்டும். ஆனால், அக்கட்சிகளோ, இத்தாக்குதல் பற்றி பா.ஜ.க.வின் குரலில் பேசி, தங்களின் 'மென்மையான' இந்து மதவெறியை வெளிப்படுத்திக் கொண்டன.

''ராமர் கோயில் மீது நடந்த தாக்குதலை நாட்டின் இறையாண்மையின் மீது நடந்த தாக்குதலாக''க் கூறினார், காங்கிரசின் பொதுச் செயலாளர் அம்பிகா சோனி.

சி.பி.எம்., சி.பி.ஐ. உள்ளிட்ட இடதுசாரிக் கூட்டணியோ, ''அயோத்தி மீது நடந்த தாக்குதல் நாட்டின் மீது நடந்த தாக்குதல்; நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி, அரசியலில் நிலையற்ற தன்மை மற்றும் சர்வாதிகாரத்தை உருவாக்க நடந்த சதி'' என பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்துள்ளன. நாட்டை



**ராமர் கோயிலைத் தாக்க முயன்ற நடவடிக்கையின் பொழுது, துணை இராணுவப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ''தீவிரவாதிகளுள்'' ஒருவர்.**

யும் நாட்டின் இறையாண்மையையும் ஒரு கோவிலோடு தொடர்புபடுத்துகிறார்கள் என்றால் இந்த நாட்டை இந்து நாடு என்றே அறிவித்து விடலாம்.

'மதச் சார்பின்மை' வேடம் போடும் காங்கிரசும், இடதுசாரிக் கட்சிகளும் 13 ஆண்டுகளுக்கு முன்பு அயோத்தியில் நடந்த வரலாற்று உண்மையைக் குழிதோண்டி புதைக்கிறார்கள். டிச. 6, 1992 அன்று பாபர் மசூதியைச் சட்ட விரோதமாக இடித்துத் தள்ளியதோடு, அந்த இடத்தில் திடீர் ராமர் கோவிலையும் கட்டி முடித்தன, ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள். இந்தச் சட்டவிரோத ராமர் கூடாரத்திற்கு, அன்று நரசிம்ம ராவ் தலைமையில் இருந்த மைய காங்கிரசு அரசும், உ.பி. மாநில உயர்நீதி மன்றமும் சட்டபூர்வ அந்தஸ்தை வழங்கின. பாபர் மசூதி வளாகத்தை, இந்துமத வெறிக் கும்பல் சட்ட விரோதமாக ஆக்கிரமித்துக் கொள்ளுவதற்கு வசதியாகவே, ''அந்த இடம் யாருக்குச் சொந்தம்?'' என்பது குறித்து நடந்துவரும் வழக்கில், ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தீர்ப்புச் சொல்லாமலேயே

**ஆர்.எஸ்.எஸ். கட்டியுள்ள ராமர் கோயில் என்ற கூடாரம், மத நம்பிக்கை சார்ந்த விசயமல்ல. இந்து மதவெறி பாசிஸ்டுகள் அமைக்கத் துடிக்கும் இந்து ராஷ்டிரத்தின் குறியீடு. இந்தக் குறியீட்டைத் தகர்க்கப் போராடுவது எந்த வகையிலும் நாட்டிற்கோ, மக்களுக்கோ எதிரானதல்ல.**

இழுத்தடித்து வருகிறது, அலகாபாத் உயர்நீதி மன்றம்.

''பாபர் மசூதி இருந்த இடத்தில்தான் ராமர் பிறந்தார் என்பதற்கோ, ராமர் கோவிலில் இருந்த இடத்தை இடித்து விட்டுத்தான் முசுலீம் மன்னர் பாபர் மசூதியைக் கட்டினார் என்பதற்கோ எந்தவிதமான ஆதாரங்களும் கிடையாது'' என்பதை ஏராளமான வரலாற்று ஆய்வுகளும், பாபர் மசூதி வளாகத்தில் நடந்துள்ள அகழ்வாராய்ச்சிகளும் நிரூபித்துள்ளன. ஆனால், இந்து மதவெறிக் கும்பலோ மத நம்பிக்கை என்ற பெயரில், இந்த அறிவியல் பூர்வமான வரலாற்று உண்மைகளை ஏற்றுக் கொள்ளாமல், அடாவடித்தனமாக நடந்து வருகிறது. ஊரான் சொத்தை ரவுடிகள் ஆக்கிரமித்துக் கொள்வதைப் போல, இந்து மத வெறிக் கும்பல், தனது அரசியல் பலம், அதிகார வர்க்கத்தில் ஊறிப் போயிருக்கும் இந்து மதவெறி ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டு, முசுலீம்களுக்குச் சொந்தமான பாபர் மசூதி வளாகத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது.

''இடிக்கப்பட்ட இடத்தில் மீண்டும் மசூதியைக் கட்டிக் கொடுக்கக் கோரிப் போராவதுதான்'' அரசியல் ரீதியில் சரியான முடிவாக இருக்க முடியும். ஏனென்றால், சட்டவிரோதமான முறையில் ஆர்.எஸ்.எஸ். கட்டியுள்ள கூடாரம், மத நம்பிக்கை சார்ந்த விசயமல்ல. இந்து மதவெறி பாசிஸ்டுகள் அமைக்கத் துடிக்கும் இந்து ராஷ்டிரத்தின் குறியீடு. இந்தக் குறியீட்டைத் தகர்க்கப் போராடுவது எந்த வகையிலும் நாட்டிற்கோ, மக்களுக்கோ எதிரானதல்ல.

ஆனால், மதச்சார்பின்மை பேசும் ஓட்டுக் கட்சிகளோ, இந்தப் பிரச்சினையில் முடிவெடுக்கும் உரிமையை நீதிமன்றத்திடம் கொடுத்துவிட்டு ஒதுங்கிக் கொண்டு விட்டன. அவர்களின் முடிவுப்படி பார்த்தால் கூட, இந்தத் தாக்குதல் முயற்சிக்குப் பிறகாவது, பாபர் மசூதி வளாகம் யாருக்குச் சொந்தம் என்ற வழக்கில் நியாயமாகவும், விரைவாகவும் தீர்ப்பு வழங்கக் கோரியிருக்க வேண்டும். ஆனால், இந்தக் குறைந்தபட்ச கோரிக்கையைக் கூட எழுப்பாமல், இந்தத் தாக்குதலை நாட்டின் மீதான தாக்குதலாக ஊதிப் பெருக்கியிருப்பது, அக்கட்சிகளின் மிதவாத இந்து மதவெறியைத்தான் எடுத்துக் காட்டியிருக்கின்றது.

• செல்வம்


படிப்பகம்

www.padippakam.com

# தமிழகம்:

# ஆதிக்க சாதி வெறியர்களின் சொர்க்க பூமி

''நாலு எழுத்துப் படிக்கப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்ட தாழ்த்தப்பட்ட சிறுவர்கள் மீது பள்ளிக்கூடக் கழிப்பறையைச் சுத்தம் செய்யும் வேலை திணிக்கப்படுகிறது.''

''சாமி கும்பிடுவதற்காகக் கோவிலுக்குள் நுழைந்த தாழ்த்தப்பட்ட இளைஞர், மேல்சாதி வெறியர்களால் அடித்தே கொல்லப்படுகிறார்.''

''இரட்டை குவளை முறையை எதிர்த்த தாழ்த்தப்பட்ட சிறுவன் சிறைக்குள் தள்ளப்படுகிறான்.''

- 'சமூக நீதி'யின் பிறப்பிடம் எனத் தூக்கி வைத்துக் கொண்டாடப்படும் தமிழகத்தில்தான் இப்படிப்பட்ட சமூக அநீதிகளும் ஒடுக்குமுறைகளும் எவ்விதத் தடையுமின்றி நடந்து வருகின்றன.

திருச்சி மாவட்டம் - மணப்பாறைக்கு அருகே அமைந்துள்ள கிராமம் பன்னாங்கொம்பு. இங்குள்ள ஊராட்சி ஒன்றிய மாதிரி தொடக்கப்பள்ளியில்தான் தாழ்த்தப்பட்ட மாணவர்களைக் கழிப்பறையைக் கழுவ வைத்து, பிஞ்சு மனங்களிலே தீண்டாமையையும், சாதிய ஏற்றத்தாழ்வுகளையும் பதிய வைத்திருக்கிறார்கள், ஆசிரியப் பெருமக்கள்.

பள்ளியையும், வகுப்பறைகளையும் சுத்தமாக வைத்துக் கொள்வதற்காக சுகாதாரக் கமிட்டியை அமைத்து, அக்கமிட்டியில் பல்வேறு சாதிகளைச் சேர்ந்த தலைமையாசிரியர் ஆரோக்கியசாமி, கழிப்பறையைக் கழுவி சுத்தம் செய்யும் வேலையை மட்டும் தாழ்த்தப்பட்ட மாணவர்களின் மீது சுமத்தி, தீண்டாமையை நடைமுறைப்படுத்தி வந்திருக்கிறார். தனலெட்சுமி என்ற ஆசிரியை தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கழிப்பறையை ஒழுங்காகச் சுத்தம் செய்கிறார்களா என்பதைக் கண்காணித்து வந்திருக்கிறார். தலைமையாசிரியரின் உத்தரவுப்படி நடந்து வந்த இந்த 'வேலைப் பிரிவினை'யை மற்ற ஆசிரியர்கள், கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்து வந்திருக்கிறார்கள்.

''தினசரி மதியம் ரெண்டு மணிக்குத்தான் சுத்தம் பண்ணுவோம். வாளி நிறைய தண்ணீர் எடுத்துட்டுப் போய் விளக்குமாறால சுத்தமா கழுவணும். டீச்சர் வந்து பார்ப்பாங்க. கழுவினது அவங்களுக்கு சரியாத் தெரியலைனா, அன்னிக்கு நாங்க கிளாஸுக்குப் போக முடியாது. முழுசுமே கக்கூஸ்தான் கழுவிக்கிட்டிருக்கணும்'' என இவ்வன்கொடுமையை விளக்குகிறான், இப்பள்ளியில் நான்காம் வகுப்பு படிக்கும் தாழ்த்தப்பட்ட சிறுவன்.

சனி, ஞாயிறு போன்ற பள்ளி விடுமுறை நாட்களில் கூட, இவ்''வேலை''யைச் செய்வதில் இருந்து தாழ்த்தப்பட்ட சிறுவர்கள் தப்பித்து விட முடியாது. இது மட்டுமின்றி, ''இப்பள்ளி வகுப்புகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்களையும், பிற மேல் சாதி மாணவர்களையும் தனித்தனியாகப் பிரித்துதான் உட்கார வைப்பார்கள்'' எனக் குற்றஞ்சுமத்துகிறார்கள், பன்னாங்கொம்பு கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளாகி அப்பள்ளியில் நடந்து வந்த இத்தீண்டாமைக் கொடுமை பத்திரிகைகளின் வழியே வெளியே கசிந்த பின்னர்தான், திருச்சி மாவட்ட ஆட்சியாளர் விசாரணை நடத்தி, உண்மையைக் கண்டுபிடித்து, தலைமையாசிரியர் ஆரோக்கியசாமியையும், தனலெட்சுமி டீச்சரையும் தற்காலிகப் பணி நீக்கம் செய்திருக்கிறார். ஆனாலும், அவர்கள் இருவரும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

•••

திருச்சி மாவட்டம் - துறையூருக்கு அருகேயுள்ள குருவம்பட்டியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட இளைஞர் சங்கர். புத்தனாம்பட்டியில் உள்ள ஆறு நாட்டு வேளாளர் சாதியினருக்குச் சொந்தமான கல்லடி கருப்பு சாமி கோவில் திருவிழாவின் போது, மேல் சாதி வெறியர்களால் சங்கர் அடித்தே கொல்லப்பட்டார்.

சம்பவம் நடந்த அன்று, தனது நண்பனின் திருமணத்

கண்டதேவியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட பெண்கள் தேரை நெருங்கி விடாமல் தடுக்கப்பட்டதால், போலீசு அமைத்திருந்த மூங்கில் தடுப்புக்கு அப்பால் நின்று தேரோட்டத்தைப் பார்க்கும் தீண்டாமைக் கொடுமை.





படிப்பகம்

www.padippakam.com




**திருத்தலைகிரியில் இரட்டை டம்ளர் நடைமுறையில் உள்ள உணவு விடுதி: (உள்படம்) அத்தீண்டாமையை எதிர்த்துக் கேட்டதால், பொய் வழக்கில் சிறையில் தள்ளப்பட்ட சிறுவன் கஞ்சமலையான்.** *(நன்றி: தலித் முரசு)*

தில் கலந்து கொள்வதற்காக, கரியமாணிக்கத்துக்குக் கிளம்பிப் போன சங்கர், போகும் வழியில் உள்ள கல்லடி கருப்பசாமி கோயில் திருவிழாவைப் பார்த்தவுடன் சாமி கும்பிடுவதற்காக அக்கோவிலுக்குள் சென்றிருக்கிறார். அடிக்கடி 'சாமி' வந்து 'அருள்வாக்கு' சொல்லும் சங்கருக்கு, கோவிலுக்குள் நுழைந்தவுடனேயே 'சாமி' வந்துவிட்டது.

அக்கோவில் திருவிழாவிற்கு வந்திருந்த மேல்சாதியினர், சங்கருக்கு சாமி மலையேறியவுடனேயே, 'யாரு எவரு'னு விசாரித்துள்ளனர். சங்கர், ''நான் குருவம்பட்டி சேரித் தெருன்னு'' சொன்னவுடனேயே, ஆதிக்கசாதி வெறியர்கள், ''சேரிப்பய கோவிலுக்குள்ள நுழைஞ்சதால கோவிலுக்குத் தீட்டுப் பட்டுருச்சு... அவனக் கட்டி வெச்சு உதைங்கடா''னு சொல்லிட்டு சங்கரை ஒரு வேப்பமரத்துல கட்டிப் போட்டு, ஆளாளுக்கு விறகுக் கட்டையால் தாக்கியும், காலால் மிதித்தும், அவரைக் கதற கதற அடித்தே கொன்று விட்டனர்.

''கோவிலுக்குள் நுழைந்து வேலைத் திருட முயன்ற சங்கரைப் பிடித்து, நாலு தட்டு தட்டி விசாரித்த பொழுது, சங்கர் எதிர்பாராத விதமாகச் செத்துப் போய்விட்டதாக'' ஒரு கட்டுக் கதையை ஆதிக்கசாதி வெறியர்கள் பரப்பி வருகின்றனர். இதன் மூலம் சாதி வெறியால் நடந்த இப்படுகொலையை, 'திருட்டைத் தடுக்க முயன்ற பொது மக்களின் கோபமாக'ப் பூசிமெழுகிவிட முயலுகின்றனர்.

கடந்த ஆறேழு ஆண்டுகளாக பெங்களூரில் கொத்தனார் வேலை பார்த்துவரும் சங்கருக்குத் திருடிப் பிழைக்க வேண்டிய அவசியமே கிடையாது. மேலும், அவர் மீது இதுவரை எந்தவொரு கிரிமினல் வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதற்கும் மேலாக, பட்டப் பகலில் கோவிலுக்குள் பல நூறு பேர் இருக்கும் பொழுது, எந்தவொரு திருடனும், நூறு ரூபாய் கூடப் பெறாத வேலைத் திருடி, தானே மாட்டிக் கொள்ளத் துணிய மாட்டான்.

இப்படி குறுக்கு கேள்விகள் கேட்டு உண்மையைக் கண்டுபிடிக்காத போலீசு, ஆதிக்கசாதி வெறியர்கள் சங்கர் பற்றி அவிழ்த்துவிடும் பொய்யையும், அவதூறையுமே முதல் தகவல் அறிக்கையாகப் பதிவு செய்து, இவ்வன்கொடுமையை மூடி மறைத்து சாதிவெறியர்களைக் காப்பாற்றிவிட

ஒத்துழைக்கிறது.

•••

**சே**லம் மாவட்டத்தில் இரட்டைக் குவளை முறை நடைமுறையில் இருக்கும் நூற்றுக்கணக்கான கிராமங்களில், திருத்தலைகிரியும் ஒன்று. ''இந்த ஊரில் உள்ள தேநீர்க் கடைகளில் இரட்டைக் குவளை முறை நடைமுறையில் இருப்பதோடு, இங்குள்ள உணவகங்களில் தாழ்த்தப்பட்டோர் உட்கார்ந்து உணவருந்த முடியாது; முடித்திருத்தகங்களில் தாழ்த்தப்பட்டோருக்கு முகம் மழிக்க மாட்டார்கள்'' எனத் தீண்டாமைக் கொடுமை தலைவிரித்தாடுகிறது.

இவ்வூரைச் சேர்ந்த 17 வயதான கஞ்சமலையான் என்ற தாழ்த்தப்பட்ட சிறுவன், விஷ்ணு காபி பார் என்ற கடையில் தாழ்த்தப்பட்டோருக்கு மட்டும் தனிக் குவளையில் தேநீர் தரும் தீண்டாமையை எதிர்த்து நியாயம் கேட்டான். இதனால் ஆத்திரமடைந்த அக்கடையின் உரிமையாளர் மாணிக்கம் மற்றும் பாண்டியன், ஆறுமுகம், வெங்கடாசலம் ஆகியோர் அச்சிறுவனைக் கொலைவெறியோடு தாக்கியதோடு, அச்சிறுவன் தங்களைக் கொலை செய்ய முயன்றதாகப் பொய்ப் புகாரும் கொடுத்தனர். இப்புகாரின் அடிப்படையில், கஞ்சமலையான் மீது மூன்று பிரிவுகளின் கீழ் வழக்கு தொடுத்து, அச்சிறுவனை சேலம் மத்திய சிறையில் அடைத்தது போலீசு.

கஞ்சமலையான் 18 வயது நிரம்பாத சிறுவன். அவனது கல்விச் சான்றிதழின் அடிப்படையில், கஞ்சமலையானுக்கு 17 வயது 9 மாதமே ஆகிறது.

**லெட்சுமிபுரம் என்ற கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளியில், கோயிலுக்கு அருகேயுள்ள திண்ணையில் மேல்சாதி - இந்து மாணவர்களுக்கும், பள்ளிக் கட்டிடத்தில் அருந்ததியர் மாணவர்களுக்கும் தனித்தனியாக மதிய உணவு வழங்கப்படுகிறது.** *(நன்றி: தலித்முரசு)*






படிப்பகம்

www.padippakam.com

எனவே, ''அச்சிறுவனை மத்திய சிறைச் சாலையில் அடைத்தது சட்டப்படி செல்லாது; மனித உரிமை மீறல்'' என வழக்குத் தொடுத்ததன் அடிப்படையில், கஞ்சமலையான் சேலம் மத்திய சிறைச்சாலையில் இருந்து சிறுவர் கூர்நோக்கு இல்லத்திற்கு மாற்றப்பட்டான்.

எனினும், சேலம் - குற்றவியல் நீதித்துறை நடுவர்மன்ற நீதிபதி மாலதி, அச்சிறுவனை மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பி, கஞ்சமலையானுக்கு 19 அல்லது 20 வயது இருக்கலாம் என மருத்துவர்கள் கொடுத்த சான்றிதழ் அடிப்படையில், அச்சிறுவனை மீண்டும் சேலம் மத்திய சிறைச்சாலையில் அடைக்க உத்தரவிட்டார்.

இந்நிலையில் கஞ்சமலையானின் தந்தை சேலம் மாவட்டத்தில் நிலவும் இரட்டை டம்ளர் தீண்டாமையைக் குறிப்பிட்டு, கஞ்சமலையானை பொய் வழக்குகளில் இருந்து விடுவிக்கக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். உயர்நீதி மன்ற நீதிபதிகள், இரட்டை டம்ளர் முறை குறித்து அறிக்கை தரும்படி சேலம் மாவட்ட ஆட்சியர், மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் மற்றும் உள்துறைச் செயலாளர் ஆகியோருக்கு உத்தரவிட்டனர். இதற்கு, சேலம் மாவட்ட போலீசு கண்காணிப்பாளராக இருந்த பொன்.மாணிக்கவேல், ''சேலத்தில் இரட்டை டம்ளர், அரைடம்ளர், கால் டம்ளர் என எதுவும் இல்லை'' எனத் திமிரோடு பதில் கூறினார்.

விடுதலைச் சிறுத்தைகள், தமிழக முசுலீம் முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் இணைந்து, ''தலித் உரிமை பாதுகாப்புக் கூட்டமைப்பு'' என்ற முன்னணியை உருவாக்கி, இரட்டை டம்ளர் முறையை அம்பலப்படுத்தியும், அதற்கு எதிராகப் போராடிய கஞ்சமலையானை விடுவிக்கக்கோரியும் பல்வேறு போராட்டங்களை நடத்திய பிறகுதான், அச்சிறுவனைத் தாக்கிய ஆதிக்கசாதி வெறியர்கள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. எனினும், அக்குற்றவாளிகளைக் கைது செய்து சிறையில் அடைக்க போலீசு முயலவேயில்லை. அதேசமயம், தீண்டாமையை எதிர்த்துப் போராடியதற்காக பிப்ரவரி 2005-இல் சிறையில் அடைக்கப்பட்ட சிறுவன் கஞ்சமலையானுக்கு, பத்திரிகை செய்திகளின்படி ஏப்ரல் - 2005 முடிய பிணைகூட கிடைக்கவில்லை.

●●●



**வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் போலீசு வழக்கு பதிவு செய்யாததால், தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்ட சம்பத்தின் மனைவியும், அவரது மூன்று குழந்தைகளும்.** *(நன்றி: தலித் முரசு)*

தமிழகம் ஆதிக்கசாதி வெறியர்களின் சொர்க்க பூமியாக இருக்கிறது என்பதைப் புட்டு வைக்கும் உதாரணங்கள்தான் இந்தச் சம்பவங்கள். ஆனால், ''தீண்டாமையை முற்றிலும் ஒழித்துவிடும் பாதையை நோக்கித் தமிழகம் சென்று கொண்டிருப்பதாக'' சட்டமன்றத்திலேயே புளுகியிருக்கும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் எஸ். கருப்பசாமி, இதற்கு ஆதாரமாக, கடந்த மூன்று ஆண்டுகளாக வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குறைவான அளவில் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

தாழ்த்தப்பட்டோர் மீது வன்கொடுமையை ஏவிவிடும் ஆதிக்கசாதி பெரிய மனிதர்கள் மீது வழக்குப் பதிய வேண்டும் என்றால், அவர்களால் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டவர்கள் அதற்குத் தங்களின் உயிரையே விலையாகத் தர வேண்டியிருக்கிறது.

கோவைக்கு அருகிலுள்ள நாகமநாயக்கன் பாளையத்தைச் சேர்ந்த சம்பத், தனக்குத் தரவேண்டிய பணத்தையும் தராமல், தன்னைச் சாதிப் பெயரைச் சொல்லி இழிவுபடுத்திய ''கல்யாண டெக்ஸ்டைல்ஸ்'' அதிபர் சண்முகம் உள்ளிட்ட 6 பேர் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்ய வேண்டும் எனக் கோரி, 26.4.2005 அன்று கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தீ வைத்துக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார். இந்தச் சாவுக்குப் பிறகும் கூட, கவுண்டர் சாதியைச் சேர்ந்த சண்முகத்தின் மீது கொலைமிரட்டல் வழக்குதான் பதிவு செய்யப்பட்டுள்ளது. கவுண்டர்களுக்கு ஆதரவாக நடந்து கொண்டு, சம்பத் கொடுத்த புகாரை, அவரை மிரட்டி திரும்பப் பெற்றுக் கொள்ள செய்த காவல்துறை ஆய்வாளர் மீது எந்தச் சட்டமும் பாயவில்லை.

அரசு ஆதிக்கசாதி வெறியர்களுக்கு ஆதரவாக மட்டும் நடந்து கொள்ளவில்லை; அரசே மனுதர்மத்தின்படி தீண்டாமையைக் கடைப்பிடித்து வருகிறது என்பதை கடந்த மாதம் நடந்த கண்டதேவி சொர்ணமூர்த்தி ஈஸ்வரர் கோவில் தேரோட்டம் பச்சையாக அம்பலப்படுத்தி விட்டது.

கண்டதேவி கிராமத்தைச் சுற்றிலும் பல்லாயிரக்கணக்கான போலீசைக் குவித்துத் தாழ்த்தப்பட்ட மக்களை பீதியூட்டி; அதையும் மீறி தேரோட்டத்தில் கலந்து கொள்ள முயன்ற தாழ்த்தப்பட்ட மக்களைச் சட்டவிரோதக் காவலில் அடைத்து; போலீசு பாதுகாப்போடு நாட்டார்களைத் தேரிழுக்க வைத்து, தீண்டாமையைக் காப்பாற்றியிருக்கிறது, பார்ப்பன ஜெயா அரசு. வழிபாட்டு உரிமைக்காகப் போராடிய தாழ்த்தப்பட்ட மக்களை, தலித் அமைப்புகளின் தலைவர்களை தீய சக்திகள் எனக் கூறி அவமானப்படுத்தியிருக்கிறார், சிவகங்கை மாவட்ட ஆட்சியாளர் ஆனந்த் பாட்டில்.

நியாயமாகப் பார்த்தால், போலீசு துறையைத் தன் கையில் வைத்திருக்கும் ஜெயா தொடங்கி, கண்டதேவியில் காவலுக்கு நின்ற போலீசுக்காரன் வரை அனைவரின் மீதும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இந்தச் சாதிவெறி பிடித்த அதிகார வர்க்கத்தின் மீது மிகச் சாதாரண நீதிமன்ற அவமதிப்பு வழக்குக் கூடத் தொடரப்படவில்லை. உயர்நீதி மன்றமும், போலீசும் ''நீ அடிக்கிற மாதிரி அடி; நான் அழுகிற மாதிரி அழுகிறேன்'' என்ற பாணியில் நடந்து கொண்டு தாழ்த்தப்பட்டவர்களின் முகத்தில் கரியைப் பூசிவிட்டன.

கடந்த ஆண்டு நடந்த கண்டதேவி கோவில் தேரோட்டத்தின் பொழுது, 10 தாழ்த்தப்பட்டவர்கள் தேரிழுப்பதில் கலந்து கொண்டார்களாம். இந்த ஆண்டு சென்னை உயர்நீதி மன்றம் அளித்த முற்போக்கான தீர்ப்புக்குப்



படிப்பகம்

www.padippakam.com

பிறகு, தேரோட்டத்தில் 26 தாழ்த்தப்பட்டோர் கலந்து கொண்டார்களாம். இந்த 'முன்னேற்றத்தின்'படி பார்த்தால், கண்டதேவியைச் சுற்றிலும் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் தேரோட்டத்தில் கலந்து கொள்ள இன்னும் எத்தனை முற்போக்கு தீர்ப்புக்களுக்காக நாம் காத்திருக்க வேண்டும்?

முற்போக்கான தீர்ப்புகள், அதை நடைமுறைப்படுத்தக் கூடிய நியாயமான அதிகாரிகள் என்ற அரசு இயந்திரத்தின் உறுப்புகள் மூலம் மட்டுமே தாழ்த்தப்பட்டோர் தங்களின் உரிமைகளைப் பெற்றுவிட முடியும் என்பதெல்லாம் மாயை என்பதைத்தான் கண்டதேவி தேரோட்டப் பிரச்சினை எடுத்துக் காட்டியிருக்கிறது. சட்டம், நீதிமன்றம், அதிகார வர்க்கம் என இவை அனைத்துமே தாழ்த்தப்பட்டவர்களை நம்ப வைத்துக் கழுத்தை அறுக்கும் பொழுது, அவர்கள் தங்களின் சமூக உரிமைகளுக்காக, சட்ட வரம்புகளை மீறி, தெருப் போராட்டத்தில் இறங்குவதைத் தவிர வேறு வழி கிடையாது என்பதுதான் கண்டதேவி தேரோட்டப் பிரச்சினையும், ஒவ்வொரு தீண்டாமைக் கொடுமையும் எடுத்துக் காட்டும் பாடம்!



**சாமி கும்பிட கோவிலுக்குள் நுழைந்ததால், ஆதிக்க சாதி வெறியர்களால் அடித்துக் கொல்லப்பட்ட சங்கரின் சடலம்.**

**• ரஹீம்**

# ஆதாரம் கேட்டவர்களின் அரிதாரம் கலைந்தது

புதிய ஜனநாயகம் - ஜூலை 2005 இதழில், ஏகாதிபத்திய நிறுவனங்களிடம் காசு வாங்கி பிழைப்பு நடத்தும் ''மக்கள் கண்காணிப்பகம்'' என்ற தன்னார்வ நிறுவனத்தை அம்பலப்படுத்தி வெளியிடப்பட்ட கட்டுரை, அந்த அமைப்பின் ஊழியர்கள், விசுவாசிகள் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தி விட்டது.

மக்கள் கண்காணிப்பகத்தின் தலைமையில் இயங்கும் ''சித்திரவதைக்கு எதிரான பிரச்சாரம்'' எனும் அமைப்பு ஜூலை 9 அன்று மதுரையில் நடத்திய கலை இரவில் பேசிய அவ்வமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜன், மக்கள் கண்காணிப்பகத்தின் இயக்குநர் ஹென்றி டிபேன், தலித் ஆதார மையத்தின் இயக்குநர் மோகன் லால்பீர் உள்ளிட்டு அனைவருமே பு.ஜ.வில் வெளியான கட்டுரை பற்றித் தங்களின் ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்தார்கள். அக்கட்டுரையில் பு.ஜ. எழுப்பியிருந்த குற்றச்சாட்டுகளுக்கும், விமர்சனங்களுக்கும் பதில் அளிக்காமல், பு.ஜ. ஆதாரம் இல்லாமல் எழுதுவதாக அவதூறு செய்தனர்.

வீரப்பனைப் பிடிக்கச் சென்ற அதிரடிப் படையால் பாதிக்கப்பட்ட இளைஞர்களையும், இன்னும் பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டு, உதவிக்காக இவர்களை நாடி வந்த அப்பாவிகளையும் இக்கலைஇரவின் பொழுது தொண்டர் படையாக மாற்றிப் பயன்படுத்திக் கொண்டது, மக்கள் கண்காணிப்பகம். ''ம.க.இ.க.காரன் உள்ளே நுழைந்து நோட்டீசு கொடுக்கிறானா?'' எனக் கண்காணிக்குமாறு தொண்டர் படைக்குக் கட்டளையிட்டிருந்த ஹென்றி டிபேன், தானும் கண்ணில் விளக்கெண்ணெயை ஊற்றிக் கொண்டு கண்காணித்தார்.

எனினும், ம.க.இ.க., பு.மா.இ.மு. தோழர்கள் மக்கள் கண்காணிப்பகத்தை அம்பலப்படுத்தி வெளியிடப்பட்ட பிரசுரங்களை, திடலின் வெளியேயும், உள்ளேயும் விநியோகித்தனர்; பார்வையாளர்களின் மத்தியில் பு.ஜ. இதழும் விற்பனை செய்யப்பட்டது.

திடலின் உள்ளே பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருந்த தோழர் ஒருவரைப் பிடித்த ஹென்றி டிபேன், ''தைரியம் இருந்தா வெளியே போய் கொடு'' என அசட்டுத்தனமாகக் கூறி, அவரை வெளியே விரட்ட முயன்றார். ''தைரியம் இருப்பதால் தான் உள்ளே வந்து கொடுக்கிறேன்'' எனப் பதில் அளித்து, ஹென்றி டிபேனின் மூக்கை உடைத்தார், அந்தத் தோழர்.

இந்த நிகழ்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்த தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த பாரதி கிருஷ்ணகுமார் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவேயில்லை. அவருக்குத் திடீரென உடல்நலம் சரியில்லாமல் போய்விட்டதாகச் சொல்லப்பட்டது. பு.ஜ.வில் வெளிவந்த கட்டுரை அவருடைய வயிற்றைக் கலக்கிவிட்டதோ, என்னவோ?

மக்கள் கண்காணிப்பகத்தில் பணியாற்றும் பொறுப்பாளர்கள், ஊழியர்கள் பு.ஜ. இதழைக் கையால் தொடக் கூட மறுத்து விட்டனர். தொட்டால் வேலை பறிக்கப்படும் என்ற அச்சம் தான் இதற்குக் காரணம். மனித உரிமைகள் பற்றி பீற்றிக் கொள்ளும் மக்கள் கண்காணிப்பகத் தலைமையின் ஜனநாயக விரோதத் தன்மையை இது அம்பலப்படுத்திக் காட்டியது.

''பு.ஜ.வில் வெளியான கட்டுரையை எழுதிய ஏகலைவன் யார்? குன்னூரில் நடந்த விசயத்தை பு.ஜ.விடம் யார் சொன்னது?'' என ஒவ்வொரு ஊழியரிடமும் தீவிரமாக விசாரணை நடத்தி வருகிறாராம், ஹென்றி டிபேன். காற்றுப் புக முடியாத இடத்தில் கூட கம்யூனிஸ்டுகள் நுழைந்து விடுவார்கள் என்பது அவருக்குத் தெரியாதா?

மக்கள் கண்காணிப்பகத்துக்கும், ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கும் இடையே உள்ள கள்ள உறவை அம்பலப்படுத்தும் புகைப்பட ஆதாரமொன்றையும் வெளியிட்டுள்ளோம். இதற்கும் சேர்த்து விசாரணை என்ற பெயரில் அப்பாவி ஊழியர்களைச் சித்திரவதை செய்யும் முன், முழுப் பூசணிக் காயை சோற்றில் மறைக்க முடியுமா என்பது பற்றி சிந்தியுங்கள், ஹென்றி டிபேன்.

குன்னூரில் நடந்த மக்கள் கண்காணிப்பகத்தின் கூட்டத்தில், அவ்வமைப்பின் ஊழியர்களுக்கு உலகமயத்தை ஆதரிக்க வேண்டிய அவசியம் குறித்து விளக்குகிறார், உலக மனித உரிமை நிதியத்தின் ஐரோப்பிய பிரதிநிதி.



*தகவல்:*
*ம.க.இ.க., பு.மா.இ.மு.,*
*மதுரை.*



படிப்பகம்

www.padippakam.com

# ஒப்பந்த விவசாயம்: விவசாயிகளைப் போண்டியாக்க இன்னுமொரு சதி!

கரும்பு விவசாயம், பருத்தி விவசாயம், குத்தகை விவசாயம் பற்றி அறிந்திருக்கிறோம். ஒப்பந்த விவசாயம் பற்றி நீங்கள் அறிந்ததுண்டா? நடப்பாண்டில் 10 முதல் 15 லட்சம் ஹெக்டேர் பரப்பளவுக்கு ஒப்பந்த விவசாயம் விரைந்து முன்னேறும் என்று பொருளாதார சூரப்புலிகள் மதிப்பீடு செய்கின்றனர். அதென்ன ஒப்பந்த விவசாயம்?

ஒப்பந்த விவசாயம் என்பது ஒரு ஒப்பந்த விவசாய நிறுவனத்திற்கும் ஒரு விவசாயிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலான விவசாயமாகும். ஒப்பந்த நிறுவனம் அளிக்கும் இடுபொருட்களான விதை, உரம், பூச்சிக் கொல்லி மருந்துகள், விவசாயக் கருவிகளின் சேவை ஆகியவற்றை அந்நிறுவனத்தின் வழிகாட்டுதலின் படி விவசாயி பயன்படுத்த வேண்டும்; குறிப்பிட்ட தரம், உற்பத்தி அளவு மற்றும் தீர்மானிக்கப்பட்ட காலகட்டத்தில் விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்து அந்நிறுவனத்திடம் ஒப்படைக்க வேண்டும். இந்த ஒப்பந்த விவசாயத்தில் விவசாயி தனது நிலம், நீர் மற்றும் உழைப்பைக் கொண்டு சாகுபடி செய்ய வேண்டும். விளைச்சலை ஒப்படைக்கும் போது, முன்கூட்டியே ஒப்பந்தத்தில் தீர்மானிக்கப்பட்ட விலைக்கோ, அல்லது சந்தை விலைக்கோ, அல்லது உற்பத்திக்கான கூலியைக் கொடுத்தோ, அந்த ஒப்பந்த நிறுவனம் வாங்கிக் கொள்ளும். இத்திட்டத்தில் பங்கேற்கும் விவசாயி, ஒப்பந்த விவசாயி (contract farmer) என்றழைக்கப்படுகிறார். இந்தத் திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்தும் நிறுவனத்தை ஒப்பந்த விவசாய நிறுவனம் (Contract farming firm) என்றழைக்கின்றனர்.

பாரம்பரியமாகப் பயிரிடப்படும் நெல், கோதுமை, சோளம் முதல் பணப் பயிரான கரும்பு, நிலக்கடலை, பருப்பு வகைகள், மிளகாய், சோயாபீன்ஸ், தக்காளி, ஆரஞ்சு வரை ஒப்பந்த விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவை மட்டுமின்றி, நம் நாட்டு விவசாயத்தில் இதுவரை சாகுபடி செய்யப்படாத கெர்கின் (வெள்ளரிக்காயைப் போன்றது), முசிலி (கண்வலி கிழங்கு), கட்டாமணக்கு, சர்க்கரை சோளம், கத்தாழை மற்றும் பல பெயர் புரியாத மருத்துவ - நறுமணத்திரவ செடிகள் ஒப்பந்த விவசாயத்தின் கீழ் பயிரிடப்பட்டு வருகின்றன. மேலும் இறைச்சிக் கோழி - முட்டைக் கோழி வளர்ப்பு, பால் உற்பத்தி, விவசாயிகளுக்கு இதுவரை அறிமுகமில்லாத ஈமு கோழி வளர்ப்பு, தீக்கோழி வளர்ப்பு - என பலவேறு துறைகளிலும் ஒப்பந்த விவசாயம் காலூன்றி வருகிறது.

இந்த ஒப்பந்த விவசாயத்தில் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களான இந்துஸ்தான் லீவர், கார்கில், பெப்சி, பி.ஹெச்.சி., மான்சாண்டோ, நெஸ்லே முதல் தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்களான டாடா, ரிலையன்ஸ், ஐ.டி.சி., மகிந்திரா அண்டு மகிந்திரா, சுகுணா, வெங்கி, கோத்ரெஜ் பயனீர் வரை முனைப்பாக ஈடுபட்டு வருகின்றன.

தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தொடங்கிய இந்த ஒப்பந்த விவசாயம், இப்போது மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம், குஜராத், அரியானா, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், மே.வங்கம் முதலான மாநிலங்கள் வரை விரிவடைந்துள்ளது. 2002-03 -இல் பஞ்சாப் மாநிலத்தில் 12,500 ஏக்கர் பரப்பளவில் நடந்துவந்த ஒப்பந்த விவசாயம், அடுத்த ஒரே ஆண்டில் 2,25,000 ஏக்கராக விரிவடைந்துள்ளது. 2008-க்குள் ஒட்டு மொத்த விவசாய நிலத்தில் 10% அளவுக்கு ஒப்பந்த விவசாயத்தின் கீழ் கொண்டு வரப் போவதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக்கப் போவதாக வாக்குறுதி அளித்துள்ள ஜெயா அரசு, 2005-2006 ஆம் ஆண்டுக்கான விவசாயக் கொள்கை அறிக்கையில் தற்போது நிலவி வரும் பருத்தி ஒப்பந்த விவசாயத்தை நடப்பாண்டில் சேலம், நாமக்கல், திண்டுக்கல், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் விரிவாக்கம் செய்ய அனுமதித்துள்ளது. மக்காசோள ஒப்பந்த விவசாயத்தை தேனி, திண்டுக்கல் மாவட்டங்களிலும், நிலக்கடலை ஒப்பந்த விவசாயத்தை கடலூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம் மாவட்டங்களிலும், எண்ணெய் வித்துக்களுக்கான ஒப்பந்த விவசாயத்தை தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களிலும் விரிவாக்கம் செய்ய அனுமதித்துள்ளது. இவையெல்லாம் போதாதென்று சர்க்கரைச் சோளம், காட்டாமணக்கு முதலானவற்றை ஒப்பந்த விவசாயத்தில் பயிரிட பல்வேறு நிறுவனங்களுக்கு ஜெயா அரசு அனுமதித்துள்ளது. கடந்த பத்தாண்டு காலமாக இறைச்சிக் கோழி, முட்டைக் கோழி உற்பத்தியில் ஒப்பந்த விவசாய முறையே பிரதானமாக உள்ளது. கடந்த சில ஆண்டுகளாக பால் உற்பத்தியிலும் இத்தகைய ஒப்பந்த முறை பரவி வருகிறது.

விவசாய உற்பத்தியைப் பெருக்கவும் விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்தவும் கொண்டு வரப்பட்டுள்ள இன்னுமொரு புதிய திட்டம் போல இந்த ஒப்பந்த விவசாயத்தை ஆட்சியாளர்கள் போற்றி வருவதோடு, அதைத் தீவிரமாகச் செயல்படுத்தவும் கிளம்பியுள்ளார்கள். ஆனால், தனியார்மய - தாராளமயக் கொள்கையின் படி நாட்டை மீண்டும் அடிமைப்படுத்தவும் விவசாயத்தை விட்டே விவசாயிகளை ஓட்டாண்டிகளாக்கவும் உருவாக்கப்பட்டுள்ள சதித்திட்டத்தின் ஓர் அங்கம்தான் ஒப்பந்த விவசாயம். உலக வர்த்தகக் கழகத்தின் உத்தரவுப்படி விவசாயத்தில் அன்னிய முதலீடுகளுக்கு 14% வரை அனுமதி, பெயரளவில் இருக்கும் நில உச்ச வரம்புச் சட்டத்தைத் தளர்த்துவது, அரசின் உணவு தானியக் கொள்முதல் நிறுவனங்களைக் காலாவதியாக்குவது, பன்னாட்டு நிறுவனங்கள் உணவு தானியக் கிடங்குகளை திறந்து கொள்ள அனுமதிக்கும் புதிய மாதிரி சந்தைச் சட்டம்.



படிப்பகம்


www.padippakam.com

இவையும் போதாதென்று மாதிரி விவசாய விற்பனைச் சட்டம், பன்னாட்டு நிறுவனங்கள் விற்கும் விதைகளை மட்டுமே விவசாயிகள் இனி பயன்படுத்த வேண்டும் என்று நிர்பந்திக்கும் புதிய விதைச் சட்டம் - என அடுத்தடுத்து கொள்கைகளையும் சட்டங்களையும் திணித்து வரும் ஆட்சியாளர்கள், இதற்கேற்ப இப்போது ஒப்பந்த விவசாய முறையை தீவிரப்படுத்தி வருகிறார்கள்.

உணவு தானியக் கொள்முதலை அரசு கை கழுவி விட்டதாலும், உரம் - பூச்சி மருந்து முதலான இடு பொருட்களின் விலை உயர்வாலும், தாராளமயத்தால் அன்னிய இறக்குமதி காரணமாக விலை வீழ்ச்சியாலும் திவாலாகிப் போன விவசாயிகள் கடன் தொல்லை தாளாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள்; அல்லது வேறு வழியின்றி ஒப்பந்த விவசாயத்துக்குத் தள்ளப்படுகிறார்கள். நொடிந்து போன விவசாயிகளுக்கு இது ஏதோ நல்லதொரு வாய்ப்பு போலத் தோன்றலாம். ஆனால், ஒப்பந்த விவசாயம் என்பது உள்நாட்டுத் தேவையைச் சார்ந்திருப்பதல்ல. சர்வதேசச் சந்தையில் எந்த உற்பத்திப் பொருளுக்குக் கிராக்கி இருக்கிறதோ அதற்கேற்ப நடக்கும் விவசாய உற்பத்தியாகும். இதனால், கிராக்கி குறைந்தாலோ, சர்வதேசச் சந்தையில் விலை வீழ்ச்சி ஏற்பட்டாலோ குறிப்பிட்ட பொருளுக்கான ஒப்பந்த விவசாயமும் படுத்து விடும்; ஒப்பந்த நிறுவனமும் காணாமல் போய் விடும்.

இப்படித்தான் பஞ்சாபில் இந்துஸ்தான் லீவர், பெப்சி முதலான பன்னாட்டு நிறுவனங்களும் தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்களும் உருளைகிழங்கு, பயிறு, கோதுமை, கரும்பு முதலானவற்றை சந்தை விலைவீழ்ச்சியைக் காரணம் காட்டி ஒப்பந்த விவசாயிகளிடம் கொள்முதலை நிராகரித்து வருகின்றன. ஒப்பந்த விவசாயிகளின் கோபத்தைத் தணிக்க வேறுவழியின்றி பஞ்சாப் மாநில அரசே இவற்றைக் கொள்முதல் செய்து வருவதை ஜெயதி கோஷ் என்ற பொருளாதார ஆய்வாளரே அம்பலப்படுத்தியுள்ளார்.

இதேபோல மத்திய பிரதேசத்தில் கோதுமை ஒப்பந்த விவசாயத்தை மேற்கொண்டுள்ள ஐ.டி.சி. நிறுவனம், ஒப்பந்த விவசாயிகளுக்குக் குறைந்த பட்ச விலை கூடக் கொடுக்காமல் கொள்முதல் செய்ததால், விவசாயிகள் இதை எதிர்த்து அரசிடம் முறையிட்டனர். விவசாயிகளின் கோபத்தைத் தணிக்க வேறுவழியின்றி நான்கு ஐ.டி.சி. அதிகாரிகளைக் கைது செய்து 48,000 மூட்டை கோதுமையையும் பறிமுதல் செய்து மாநில அரசு வழக்கு தொடுத்துள்ளது. (எகனாமிக் டைம்ஸ், 26.5.05) ஏற்கெனவே கரும்பு விவசாயிகளுக்கு பட்டை நாமத்தைப் போட்டு




விட்டு கோடி கோடியாய் சர்க்கரை ஆலை முதலாளிகள் சுருட்டி ஏப்பம் விடும்போது, ஒப்பந்த விவசாய நிறுவனங்கள் நேர்மையாக நடந்து கொள்ளும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

இந்த ஒப்பந்த விவசாயத்தில், பன்னாட்டு நிறுவனங்களும் தரகு முதலாளித்துவ நிறுவனங்களும் விவசாயிகளுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தமே மோசடியானது. எழுத்துபூர்வ ஒப்பந்தமாக இல்லாமல் பெரும்பாலும் வாய்வழி ஒப்பந்தங்களே போடப்படுகின்றன. அவையும், ஒப்பந்த நிறுவனங்களின் நலனுக்கேற்ப, அதற்கு எந்தவகையிலும் பாதிப்பு ஏற்படுத்தாத வகையிலேயே போடப்படுகின்றன. பஞ்சாபில், குளிர்பான நிறுவனமான பெப்சி, ஒப்பந்த விவசாயிகள் தமது நிறுவனத்திடம் மட்டுமே உற்பத்திப் பொருட்களை முழுமையாக விற்க வேண்டும் என்றும், வெளியில் விற்றாலோ சேமித்து வைத்தாலோ குற்றமாகக் கருதப்பட்டு அபராதம் விதிக்கப்படும் என்றும் தனது ஒப்பந்தத்தில் எச்சரிக்கிறது. நைஜர் அக்ரோ புட்ஸ் என்ற நிறுவனம், தனது பதப்படுத்தும் ஆலை இயங்காமல், கொள்முதல் செய்ய முடியாமல் போனால், அதனால் ஒப்பந்த விவசாயிக்கு ஏற்படும் நட்டத்திற்கு நிறுவனம் பொறுப்பல்ல என்று தனது ஒப்பந்தத்தில் தப்பித்துக் கொள்கிறது.

பன்னாட்டு ஏகபோக விவசாய நிறுவனங்களே இப்படி மோசடி செய்து ஒரு தலைப்பட்சமான ஒப்பந்த விதிகளுடன் ஏய்க்கும் போது, உள்நாட்டுக் கம்பெனிகளின் மோசடியைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. மோசடி நிதி நிறுவனங்களைப் போலவே, இத்தகைய ஒப்பந்த விவசாயக் கம்பெனிகளும் குறிப்பிட்ட காலத்திற்குள் கோடிகோடியாய் சுருட்டிக் கொண்டு கம்பி நீட்டி விடுகின்றன. கோவை - தர்மபுரி மாவட்டங்களில், ஒப்பந்த முறையில் கண்வலிக் (முசிலி) கிழங்கைப் பயிரிட வைத்த நிறுவனம் திடீரெனத் தலைமறைவாகி விட்டது. இந்த மோசடியால் நடுத்தர விவசாயிகளும் சிறு முதலாளிகளும் பல லட்சங்களை இழந்தனர். மைய அரசின் மருத்துவ செடிகளுக்கான வாரியமோ, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மருந்துச் செடி உற்பத்திப் பொருட்களுக்கு உத்திரவாதமான சந்தை இல்லை என்று அறிவித்து விவசாயிகளுக்கு இப்போது எச்சரிக்கை விடுத்துள்ளது. இதேபோல ஆந்திர மாநில அரசும் அறிவிப்பு வெளியிட்டு விவசாயிகளை எச்சரித்துள்ளது.

இவை ஒருபுறமிருக்க, வாசனைத் திரவிய மலர்ப்பண்ணை, மூலிகைப் பண்ணை, ஈமு கோழி வளர்ப்பு, முயல் வளர்ப்பு என பலதரப்பட்ட ஒப்பந்த விவசாய நிறுவனங்கள் புற்றீசல் போலப் பெருகி வருகின்றன. கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக் கோட்டை வட்டத்திலுள்ள அனுசோனை கிராமத்தில் அரவிந்த் மாடர்ன் ஃபார்ம் என்ற ஒப்பந்த நிறுவனம், ஈமு கோழி வளர்ப்பில் ஈடுபட்டு வருகிறது. ''ஈமு கோழி வளர்த்தால் குபேரனாக



படிப்பகம்

www.padippakam.com

லாம்; முயல் வளர்த்தால் முன்னேற லாம்; இளைஞர்களே, ஒரு நொடி சிந்திப்பீர்! உங்கள் ரத்தத்தை உறிஞ்சும் பன்னாட்டு நிறுவனங்களுக்குக் கூலி வேலை செய்யப் போகிறீர்களா? மண்ணின் மகத்துவத்தைப் போற்றும் கால் நடை வளர்ப்பில் முதலாளிகளாக மாறப் போகிறீர்களா?'' என்று பல வண்ண விளம்பரங்களுடன் விவசாயிகளையும் வேலையில்லா இளைஞர்களையும் இந்நிறுவனம் ஆசை காட்டி இழுக்கிறது. ஆஸ்திரேலியா ஈமு கோழியை இறைச்சிக்காகவோ அல்லது பிற தேவைகளுக்காகவோ வாங்குவோர் நம் நாட்டில் அறவே கிடையாது. மறுபுறம், ஈமு கோழியை வாங்கி ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களும் கிடையாது. ஆனாலும் இம்மோசடி நிறுவனத்தின் விளம்பரங்களுக்குப் பஞ்சமில்லை. இந்த நிறுவனத்தின் முதலாளி ஒரு தமிழன் என்பதால், அதற்கு முட்டுக் கொடுத்து ஆதரித்து விளம்பரப்படுத்துவதோடு, மிகப் பெரிய சாதனையாளர் போல இந்த ஒப்பந்த நிறுவன முதலாளியிடம் பேட்டி கண்டு வெளியிட்டுள்ளது, ''தாகம்'' என்ற தமிழினப் பிழைப்புவாதிகளின் பத்திரிகை.

'மோசடி' செய்யாத 'நல்ல' நிறுவனங்களாகக் காட்டிக் கொள்ளும் பல ஒப்பந்த விவசாய நிறுவனங்கள், உற்பத்தியோடு நின்றுவிடாமல் விற்பனை செய்யவும் தொடங்கி விட்டன. ஐ.டி.சி. நிறுவனம் பெரு நகரங்கள் மட்டுமின்றி, சந்தை நகரங்கள் - கிராமங்களில் கூட பேரங்காடிகளைத் (ஷாப்பிங் மால்) திறக்கத் தொடங்கி விட்டது. இறைச்சிக் கோழி ஒப்பந்த விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கோத்ரெஜ், சுகுணா, வெங்கீஷ் முதலான நிறுவனங்கள் இப்போது நேரடியாகவே கோழி இறைச்சியை விற்க ஆரம்பித்து விட்டன. வெங்கிஷ் நிறுவனம் ''புரோமார்க் சிக்கன்'' என்ற பெயரிலும், சுகுணா நிறுவனம் ''சுகிஸ் சிக்கன்'' என்ற பெயரிலும் கோழி இறைச்சி விற்பனைக் கடைகளை நகரங்களில் தொடங்கியுள்ளன. வரும் காலங்களில் பால் பாக்கெட் போல பதப்படுத்தப்பட்ட இறைச்சியை பாக்கெட் செய்து மக்களிடம் பிரபலமாக்கப் போவதாக சுகுணாவின் முதலாளி பேட்டியளிக்கிறார். (ஆனந்த விகடன், 19.6.05) அப்பேட்டியில் கருவறை முதல் கறியாகும் வரை இருந்த இடைத்தரகர்களை அகற்றி விவசாயிகளுக்கு இலாப உத்திரவாதம் கொடுத்துள்ளோம் என்கிறார் 800 கோடி ரூபாய் ஆண்டு வருமானமாகக் கொண்ட இந்நிறுவனத்தின் முதலாளி. தென்னிந்தியாவில் ஒட்டுமொத்த இறைச்சிக் கோழி உற்பத்தி - விற்பனையை ஏகபோகமாக தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள சிறு விவசாயிகள், விற்பனை செய்யும் வியாபாரிகள், இறைச்சிக் கடைக்காரர்கள், துணைத் தொழில் (கோழிகளை ஏற்றிச் செல்லும் வாகனத் தொழில், தீவனத் தொழில்) செய்வேரின் வாழ்வைப் பறித்து விட்டு, மலிவு விலையில் ''சிக்கன்'' தரப்போவதாக, கோடிகளைச் சுருட்டிய இந்நிறுவனம் நம் காதில் பூ சுற்றுகிறது. இவையெல்லாம் தொடக்கம்தான். ஒப்பந்த விவசாயம் இன்னும் விரிவாகத் தொடர்ந்தால் இன்னும் பல விபரீத விளைவுகள் ஏற்படுவது நிச்சயம்.

ஏனெனில், சாதாரண நெற்பயிரை விட அதிக அளவில் தண்ணீர் தேவைப்படும் ''பாசுமதி'' நெல் சாகுபடியைத்தான் பஞ்சாபில் ஒப்பந்த விவசாய நிறுவனங்கள் நடத்தி வருகின்றன. அதுவும் குறுகிய காலத்தில் அதிக லாபத்தைச் சுருட்டுவதற்காக, ஒரே நேரத்தில் பல்லாயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பாசுமதி பயிரிடப்படுகிறது. இதனால் விவசாயத்தின் பன்முகத்தன்மை இழந்து, நிலம் சத்தின்றி மலடாகிப் போவதும் நிலத்தடி நீர் வரைமுறையின்றி சுரண்டப்படுவதும் தொடர்கிறது. இதுதவிர, அளவுக்கு மீறி பூச்சி மருந்து, களைக்கொல்லி மருந்து, பூ பூக்க மருந்து, காயைக் கனியாக்க மருந்து மற்றும் இரசாயன உரங்களைப் பயன்படுத்துமாறு ஒப்பந்த விவசாய நிறுவனங்கள் நிர்ப்பந்திப்பதால், விளை நிலமானது உடனடியாக சீரமைக்க முடியாத அளவுக்கு நஞ்சாகிப் போவதும், சுற்றுச்சூழல் நாசமாவதும் தொடர்கிறது.

விவசாயமும் விவசாயிகளும் நாசமானால் என்ன! ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணி கிடைக்கிறதே! என்று ஒப்பந்த விவசாயத்துக்கு ஊக்கமளித்து எல்லா உதவிகளையும் ஆட்சியாளர்கள் செய்து வருகின்றனர். சாதாரண விவசாயிக்கு கடன்தர முன்வராத வங்கிகள், ஒப்பந்த விவசாய நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து ஒப்பந்த விவசாயத்துக்கு கடன்களை அள்ளி இறைக்கின்றன. கார்கில் என்ற பன்னாட்டு நிறுவனம் பாரத ஸ்டேட் வங்கியுடன் கூட்டுச் சேர்ந்து ஒப்பந்த விவசாயத்தை விரிவாக்கி வருகிறது. கார்கில் நிறுவ்னம் ஒப்பந்த விவசாயிகளுக்கு இடு பொருட்களைக் கொடுத்துவிட்டு அதற்கான பணத்தை விவசாயியின் பெயரில் வங்கியிலிருந்து கடனாக எடுத்துக் கொள்கிறது. விவசாயிகளிடமிருந்து உற்பத்தியைக் கொள்முதல் செய்து, அதற்கான பணத்தைப் பட்டுவாடா செய்யும்போது கடன் தொகையையும் அதற்கான வட்டியையும் பிடித்துக் கொண்டு மீதியைக் கொடுக்கிறது.

இந்த ஒப்பந்த விவசாயம் பிரச்சினையின்றி சீராக நடைபெறுவதற்காக உள்ளூரளவில் சுய உதவிக் குழுக்கள் மற்றும் தன்னார்வக் குழுக்களைப் பயன்படுத்துவதும் அதிகரித்து வருகிறது. உதாரணமாக, அப்பாச்சி காட்டன் என்ற ஒப்பந்த விவசாய நிறுவனம் தமிழகத்தில் தங்களது பருத்தி விவசாயத்தை சுய உதவிக் குழுக்களைக் கொண்டு நடத்தி வருகிறது. தென்னிந்திய காட்டன் மில் கூட்டமைப்பு, தன்னார்வக் குழுக்களை ஒப்பந்த பருத்தி விவசாயத்தில் பயன்படுத்தப் போவதாகவும் அறிவித்துள்ளது. விவசாயத்தில் புதிய வகை தரகர்களாகவும் ஒட்டுண்ணிக் கும்பலாகவும் தன்னார்வக் குழுக்கள் புதிய அவதாரம் எடுத்து வருவதையே இவை நிரூபித்துக் காட்டுகின்றன.

''உணவு உற்பத்தியைக் குறை! மானியங்களை நிறுத்து! ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து உணவு தானியங்களை இறக்குமதி செய்!'' - என்று உத்தரவிடுகிறது உலக வர்த்தகக் கழகம். அதற்கேற்ப பாரம்பரிய விவசாயத்தை நாசமாக்கி, ஏகாதிபத்தியங்களின் தேவைக்கேற்ப விவசாயத்தை மாற்றியமைக்கும் புதிய ஏற்பாடுதான் ஒப்பந்த விவசாயம். அன்று காலனிய ஆட்சியின்போது, தனது தேவைக்காக அவுரிச்செடி (நீலச்சாயச் செடி) பயிரிடுமாறு நிர்ப்பந்தித்து விவசாயத்தை நாசமாக்கியது வெள்ளை ஏகாதிபத்தியம். அது காலனியாதிக்கம். இன்று நேரடியாக வெள்ளைக்காரன் ஆட்சி செய்யவில்லை. மாறாக, ஏகாதிபத்திய எடுபிடிகள் ஆட்சி செய்கிறார்கள். அன்று போலவே இன்றும் விவசாயத்தை நாசமாக்கி, ஏகாதிபத்தியங்களின் நலனுக்கேற்ப இறால் வளர்ப்பு, ஈமு கோழி வளர்ப்பு, வெனிலா பயிர், மருந்துச் செடி, கெர்கின் காய் பயிரிடுதல் என ஒப்பந்த விவசாயம் திணிக்கப்படுகிறது. இது மறுகாலனியாதிக்கம்.

அன்று நம் முன்னோர்கள் அவுரிச் செடி பயிரிட மறுத்து பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகளுக்கு எதிராக கலகம் செய்து சுதந்திரப் போராட்டத்தை நடத்தினார்கள். அந்த வீரம் செறிந்த மரபில் வந்த நாம், ஒப்பந்த விவசாயத்துக்கும் மறுகாலனியாதிக்கத்துக்கும் எதிராகப் போராடுவதைத் தவிர வேறு வழி இருக்க முடியுமா?

● செஞ்சுடர்



படிப்பகம்

www.padippakam.com

*சிறீராம் ஃபைபர்ஸ்:*

# கொத்தடிமைத்தனத்திற்கு எதிராகக் கொதித்தெழும் தொழிலாளர்கள்

• அரசு விடுமுறை நாட்களில்கூட தொழிலாளிக்கு விடுப்பு கிடையாது; முன்அனுமதியுடன்கூட தொழிலாளி விடுப்பு எடுக்க முடியாது.

• சம்பள உயர்வு கிடையாது; பஞ்சப்படியும் கிடையாது.

• தொழிலாளர்கள் சங்கம் கட்ட முயற்சித்தால், தற்காலிகப் பணி நீக்கம்; வெளிமாநிலக் கிளைகளுக்கு மாற்றம்.

• போராடிய தொழிலாளர்கள் மீது பொய்வழக்கு.

• தொழிலாளர் நலச் சட்டங்கள், தொழிற்சங்க சட்டங்கள் குப்பைக் கூடையில்.

— இவையெல்லாம் ஆந்திரா - கர்நாடகாவில் கூலி விவசாயிகளைக் கொத்தடிமைகளாக நடத்தும் செங்கற்சூளைகளில் பின்பற்றப்படும் விதிகள் அல்ல. இந்தியாவின் மிகப்பெரிய தரகு முதலாளித்துவ நிறுவனங்களுள் ஒன்றான சிறீராம் ஃபைபர்ஸ் (SRF) நிறுனத்தில் தொடரும் சட்டவிரோத கொத்தடிமைத்தனங்கள்.

சிறீராம் ஃபைபர்ஸ் நிறுவனம் சென்னையை அடுத்துள்ள கும்மிடிப்பூண்டியில் தனது கிளை நிறுவனத்தைத் தொடங்கி நைலான் இழைகளை உற்பத்தி செய்கிறது. இந்த ஆலையில் 160 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். சட்டப்படியான உரிமைகளை மறுத்து தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக்கி மாட்டைப் போல வேலை வாங்கி வந்த இக்கிளையில், வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களின் முன்முயற்சியால் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி தலைமையில் எஸ்.ஆர்.எஃப் புதிய ஜனநாயகத் தொழிலாளர் சங்கம் எனும் புதிய தொழிற்சங்கம் 3.4.05-இல் தொடங்கப்பட்டது.

இக்கொத்தடிமை நிறுவனம், அரசு விடுமுறை நாளான - தொழிலாளர் தினமான மே முதல் நாளன்று வேலைக்கு வராத தொழிலாளர்கள் 44 பேருக்கு ''மெமோ'' கொடுத்துள்ளதை எதிர்த்தும், ஒரு நாளைக்கு தொடர்ச்சியாக 10 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யக் கூடாது என்ற சட்டத்தையும் மீறி 2-3 ஷிப்டுகள் தொடர்ந்து வேலை செய்யுமாறு தொழிலாளர்களை நிர்ப்பந்திப்பதை எதிர்த்தும், தொடர்ந்து பல ஆண்டுகளாக சம்பள உயர்வு - பஞ்சப்படி வழங்காமலும் இ.எஸ்.ஐ. மருத்துவ வசதி செய்து தராமலும் ஏய்ப்பதை எதிர்த்தும் எஸ்.ஆர்.எஃப். பு.ஜ.தொ.சங்கம் தொடர்ந்து போராடியது. தொழிலாளர் துறை இணை ஆணையர் முன்பு இத்தொழிற் தாவாவை முன்வைத்தும் கூட, ஆணையர் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடத்த வராமல் நிர்வாகம் அலட்சியப்படுத்தியது. மறுபுறம், தொழிற்சங்க முன்னோடிகளை சட்ட விரோத வழிகளில் பழி வாங்கி வருகிறது.

கடந்த சில மாதங்களில், சங்கம் கட்டிய 'குற்ற'த்திற்காக 5 தொழிலாளர்கள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். 11 தொழிலாளர்கள் மத்தியப் பிரதேசத்தின் குவாலியர் பிரிவுக்கு தூக்கியடிக்கப்பட்டுள்ளனர். 14 தொழிலாளர்கள் 'பயிற்சி' என்ற பெயரில் ஆந்திராவிலுள்ள என்.டி.டி.இ. பயிற்சி மையத்துக்கு விரட்டப்பட்டுள்ளனர். 9 தொழிலாளர்கள் போபாலில் உள்ள பயிற்சி மையத்துக்கு இதேபோல துரத்தப்பட்டுள்ளனர். சங்கத்தின் தலைமைப் பொறுப்புகளில் உள்ள தொழிலாளர்களை கேரளா, ராஜஸ்தான் என பிற மாநிலங்களுக்கு அவசர வேலையாக அடிக்கடி அனுப்புவதோடு, ஆலைக்குள் வரவேண்டாம்; சம்பளம் கொடுத்து விடுகிறோம் என்று 4 முன்னணியாளர்களை வெளியிலேயே வைத்துள்ளது நிர்வாகம். நிர்வாகத்தின் சட்டவிரோத - பழிவாங்கும் போக்கை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு விசாரணையில் உள்ளது.

சிறீராம் நிறுவனத்தின் பழிவாங்கும் போக்கை எதிர்த்தும், தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்தும் கும்மிடிப்பூண்டியில் 22.5.05 அன்று பு.ஜ.தொ.மு. எழுச்சிமிகு பேரணியையும் பொதுக் கூட்டம் - கலை நிகழ்ச்சியையும் நடத்தியது. குடும்பம் குடும்பமாக தொழிலாளர்கள் பெருந்திரளாகப் பங்கேற்ற ஊர்வலமும் பொதுக் கூட்டமும் இப்பகுதி வாழ் உழைக்கும் மக்களால் பெருத்த உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டது.

இதற்கிடையே, குவாலியருக்கு மாற்றப்பட்ட தொழிலாளர்கள், அந்த யூனிட்டில் பணியாற்றும் தொழிலாளர்களிடம் உண்மை நிலையை விளக்கி ஒன்றுபட்டுப் போராட அறைகூவல் விடுத்தனர். குவாலியரிலுள்ள சிறீராம் நிறுவனத்தின் தொழிலாளர்கள் இருமுறை பொதுக்குழுவைக் கூட்டி இதுபற்றி விவாதித்துள்ளனர். இதையறிந்து பீதியடைந்த நிர்வாகம், கும்மிடிப்பூண்டி தொழிலாளர்களை குவாலியர் சங்கத்தில் சேர்த்து விடாதீர்கள்; மீண்டும் கும்மிடிப்பூண்டிக்கே அவர்களை அனுப்பி விடுகிறோம் என்று அங்குள்ள சங்க நிர்வாகிகளிடம் பேரம் பேசிவருகிறது. ஆனால், பு.ஜ.தொ.சங்கத்தின் முன்முயற்சியால், சிறீராம் நிறுவனத்தின் பிற கிளைகளான குவாலியர் (ம.பி.), மணலி (சென்னை), விராலிமலை (திருச்சி) ஆகியவற்றின் தொழிற்சங்கங்களுடன் இணைந்து போராடுவதற்கான கூட்டமைப்பை கட்டியமைக்கும் வேலைகள் வேகமாக நடந்து வருகின்றன. இவற்றைக் கண்டு அரண்டு போயுள்ள டெல்லியிலுள்ள இந்நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி, பு.ஜ.தொ.சங்கத்தின் தலைமையிடம் பேச்சு வார்த்தை நடத்த முன்வந்துள்ளார்.

எஸ்.ஆர்.எஃப். நிர்வாகத்தின் பழிவாங்கும் போக்கைக் கண்டித்து குடும்பத்துடன் தொழிலாளர்கள் நடத்திய ஊர்வலம்.




பு.ஜ.தொ.ச.வின் சமரசமற்ற போராட்டமும் போர்க்குணமும் தொழிலாளர்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது. மிகப் பெரிய தரகு முதலாளிக்கு எதிராக பு.ஜ.தொ.மு. நடத்தி வரும் போராட்டம், சிறீராம் நிறுவனத்தின் கிளைகள் எங்கும் எதிரொலித்து வருகிறது. தொழிலாளி வர்க்கம் தோற்றதாக வரலாறு இல்லை.

*தகவல்:*
— எஸ்.ஆர்.எஃப். புதிய ஜனநாயகத் தொழிலாளர் சங்கம், கும்மிடிப்பூண்டி.


படிப்பகம்

www.padippakam.com

தலையங்கம் தொடர்ச்சி...

இந்தப் போராட்டத்தின் தொடக்கப் புள்ளியாக அமைந்த சம்பவமே குர்கான் தொழிலாளி வர்க்கத்தின் மீது திணிக்கப்பட்டிருக்கும் கொடுங்கோன்மைக்குச் சான்று கூறுகிறது. 6 மாதங்களுக்கு முன் ஹோண்டா நிர்வாகத்தின் அதிகாரியொருவன் ஒரு தொழிலாளியைத் தாக்கியதாகவும், அதற்கு நியாயம் கேட்கப் போன 4 தொழிலாளர்களையும் சேர்த்து 5 பேரையும் வேலை நீக்கம் செய்ததாகவும், இந்த அநீதியை எதிர்த்த 50 தொழிலாளர்கள் உடனே தற்காலிக நீக்கம் செய்யப்பட்டு விட்டதாகவும் கூறுகிறது "இந்து" நாளேடு. மிகக் குறுகிய காலத்தில் 1000 தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்ததுடன், ஜூன் - 27 முதல் கதவடைப்பும் செய்திருக்கிறது, நிர்வாகம்.

மாட்டைக் கொன்றதாகக் குற்றம் சாட்டி 5 தலித் இளைஞர்களைப் பகிரங்கமாக வெட்டிக் கொன்றார்களே ஜாட் சாதி வெறியர்கள், அந்த நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மை அரங்கேறிய ஜஜ்ஜாருக்கு அருகில்தானிருக்கிறது குர்கான். அதற்கு எந்த விதத்திலும் சளைக்காத முதலாளித்துவக் கொடுங்கோன்மை இந்தத் தொழில் நகரம் முழுவதும் ஆட்சி செலுத்துகிறது. "நாட்டின் தலைநகருக்கு அருகாமையிலேயே இருக்கும் இந்தத் தொழில் நகரத்தில் இந்திய அரசின் சட்டங்கள் எதையும் பன்னாட்டு நிறுவனங்கள் மதிப்பதில்லை" என்று ஒப்புதல் வாக்குமூலம் தருகிறது 'மார்க்சிஸ்டு' கட்சி. "போலீசு பன்னாட்டு நிறுவனங்களின் கூலிப்படையா?" என்று விடை தெரிந்த விசயத்தையே கேள்வியாக எழுப்புகின்றனர் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

இத்தகைய கேள்விகளின் அசட்டுத்தனத்தை அம்பலமாக்குவதுபோல வெளிவருகிறது அரியானா காங்கிரசு முதல்வர் ஹூடாவின் வேண்டுகோள்: "அந்நிய மூலதனத்தின் மையமான குர்கானில் அமைதி திரும்ப உதவுங்கள்!". அமைதி திரும்ப வேண்டுமென்றால் தொழிலாளர் துறை 'சீர்திருத்தங்கள்' உடனே சட்டமாக்கப்பட வேண்டும் என்று அறிக்கை விடுகிறது இந்திய முதலாளிகள் சங்கம்.

அடி வாங்கிய தொழிலாளி அதைச் சகித்துக் கொண்டு போயிருந்தால், வேறு நான்கு பேர் அதில் தலையிட்டு நீதி கேட்காமல் ஒதுங்கியிருந்தால், அவர்களுடைய வேலை நீக்கத்தை அந்த 50 பேர் கண்டு கொள்ளாமல் விட்டிருந்தால் பிரச்சினை இல்லை, போராட்டம் இல்லை, தடியடியும் இல்லை. இத்தகைய தொழில் அமைதியைத்தான் பன்னாட்டு நிறுவனங்கள் கோருகின்றன; ப.சிதம்பரமும் கோருகிறார். "குர்கான் போன்ற சம்பவங்கள் பன்னாட்டு நிறுவனங்களின் பார்வையில் இந்தியாவின் மதிப்பைக் குறைத்து விடும்" என்று இந்திய அரசுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார் ஜப்பானின் தூதர். இந்தத் திமிர்த்தனமான பேச்சுக்கு சம்பிரதாயமான எதிர்ப்பைக் கூட இந்திய அரசு காட்டவில்லை. இந்தப்புறத்தில் அடிபட்ட தொழிலாளர்களுக்கு ஆறுதல் கூறுகிறார் சோனியா. அந்தப் புறம் பன்னாட்டு முதலாளிகளிடம் பல்லிளித்துச் சமாதானம் கூறிக் கொண்டிருக்கிறது காங்கிரசு அரசு.



பன்னாட்டு நிறுவனத்தின் கூலிப்படையான போலீசு, ஹோண்டா தொழிலாளர்களை மட்டுமின்றி, தெருவில் நின்று கொண்டிருந்தவர்களைக் கூட நாயைப் போல அடித்துத் துரத்தும் கொடூரம்.

குர்கான் போராட்டம் மூலம் இந்தியத் தொழிலாளி வர்க்கம் அடைந்துள்ள விழிப்புணர்வைக் காட்டிலும், பன்னாட்டு முதலாளிகளும் இந்தியத் தரகு முதலாளிகளும் அடைந்துள்ள எச்சரிக்கை உணர்வே துலக்கமாகத் தெரிகிறது. தொழிலாளி வர்க்கத்தின் மீது சட்டபூர்வமாகவே பாசிசத்தை நிலைநாட்டுவது ஒன்றுதான் மறுகாலனியாக்கக் கொள்ளைக்குத் தேவையான உத்திரவாதத்தை வழங்கும் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

குர்கான் அடக்குமுறையின் உண்மையான பொருளைத் தொழிலாளி வர்க்கம் புரிந்து கொள்ள வேண்டும். இது வெறும் போலீசு வெறியாட்டமோ தொழிற்சங்க உரிமை பறிப்பு குறித்த பிரச்சினை மட்டுமோ அல்ல; இவை விளைவுகள் மட்டுமே. உரிமைகள் ஏதுமற்றக் கொத்தடிமைகளாய் தொழிலாளர்கள் சுரண்டப்படும் கொடுமை நாட்டின் ஒவ்வொரு தொழில் நகரத்திலும் பரவி வருகிறது. கிராமங்களில் அது விவசாயிகளின் தற்கொலையாக, காரணம் அறியவொண்ணாத பட்டினிச் சாவாக வடிவமெடுக்கிறது. நாடு முழுமையும் ஏவிவிடப்பட்டிருக்கும் இந்த மரணமும், அடிமைத்தனமும், அடக்குமுறையும் மறுகாலனியாக்கத்தின் விளைவுகள். இந்த உண்மையைத் தொழிலாளி வர்க்கம் உணர்ந்து கொள்ளும்போது, 'மறுகாலனியாக்கத்தின் ஜாலியன்வாலா பாக்' என்றழைக்கப்படும் அரசியல் முக்கியத்துவத்தை குர்கான் போராட்டம் பெற்றுவிடும். ●



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்

❍ ஏகாதிபத்திய வல்லரசுகளால் நசுக்கப்பட்டு, மூலவளங்கள் சூறையாடப்பட்டு வரும் நிகழ்வுகள் அதிகரித்துள்ளது. கூடவே, ஏழை நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பியக்கங்களும் வலுப்பெற்று வருவதற்கு பொலிவியா நல்ல உதாரணம். பொலிவிய மக்களின் அரசியல் விழிப்புணர்வும் போர்க்குணமும் என்றும் போற்றத்தக்கது. மனித உரிமை என்ற பெயரில் ஏகாதிபத்தியங்களுக்குக் கைக்கூலி வேலை செய்யும் மக்கள் கண்காணிப்பகத்தின் உண்மை முகத்தைத் திரைகிழித்துக் காட்டியது சிறப்பு.

**– நிர்மலா, திருச்சி.**

❍ என்னங்க இது வம்பா இருக்குது? ராஜஸ்தான்ல குடிதண்ணீர் கேட்ட விவசாயிகள பா.ஜ.க. அரசு சுட்டுக் கொல்லுதா? பாவங்க பா.ஜ.க.; ஓசோன் வாயு மண்டலத்தையே ஓட்டை போட்டு அமெரிக்காகாரன் வருண பகவான விரட்டிப்புட்டான். லோக ஷேமத்துக்காக வாட்டர் சப்ளை பண்ற அமெரிக்க பகவானுக்காக விவசாயிங்க வருண ஜெபம் பண்ணியிருந்தா பா.ஜ.க. அரசாங்கம் பாராட்டியிருக்கும். விவரம் புரியாம விவசாயிங்க போராடுனா பா.ஜ.க.காரன் சும்மாவா இருப்பான். குஜராத்தையே கொளுத்துனவங்க கிட்ட மோதலாமா?

**– இராசா இராவணன், பழனி.**

❍ பயங்கரவாதிகள் என்போர் ஆட்சியாளர்கள் சித்தரிப்பதுபோல, வெடிகுண்டுகளுடன் திரிபவர்கள் அல்ல; ஏற்றுமதிக் கொள்ளைக்காக சொந்த மண்ணையும் மக்களையும் நாசமாக்கும் தரகுப் பெருமுதலாளிகள்தான் என்பதை அட்டைப்படக் கட்டுரை எடுப்பாக உணர்த்தியது. பொலிவிய பஞ்சைப் பராரிகளின் பேரெழுச்சி, தண்ணீர் தனியார்மயத்துக்கு எதிராகப் போராடி வரும் நம்நாட்டு மக்களுக்கு நிச்சயம் உணர்வூட்டும்.

**– கணேசன், சாத்தூர்.**

❍ அடக்குமுறைக்குள்ளான உழைக்கும் மக்கள்தான் இனி உலகை ஆளப்போகிறார்கள் என்பதற்கான தொடக்கம்தான், பொலிவியா உள்ளிட்டு உலகெங்கும் நடந்துவரும் மக்கள் பேரெழுச்சிகள். திருமா மற்றும் மாயாவதியின் பார்ப்பன சேவையை அவர்களது வாக்குமூலங்களிலிருந்தே அம்பலப்படுத்திக் காட்டியிருப்பது அருமை.

**– வாசகர் வட்டம், சென்னை.**

❍ தண்ணீரைக் கொண்டு ஒரு நாட்டை எவ்வாறு அடிமைப்படுத்த முடியும் என்பதையும், இதற்கான தரகு – ஆதிக்க நிறுவனங்களாக உலக வங்கியும் பன்னாட்டு நாணய நிதியமும், சர்வதேச நிதி நிறுவனங்களும் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை பு.ஜ. எடுப்பாக விளக்குகிறது.

**– ஜீவா, சென்னை.**

❍ கல்விக் கடவுள்(?) கலைமகளே இச்சூழலில் கல்வி கற்க வந்தால்கூட, வீணையை விற்றுத்தான் கல்விக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியிருக்கும் என்பதை நுழைவுத் தேர்வு குறித்த தலையங்கக் கட்டுரை உணர்த்தியது.

**– ஓஷோதாசன், மாப்பிள்ளை குப்பம்**

❍ அட்டைப்படத்தில் கோரமாக உள்ள சிறுமியைப் பார்த்த பிறகு, இதற்குக் காரணமான முதலாளிகள் மீது வெஞ்சினம் பீறிட்டு எழுகிறது. ஒரத்துப் பாளையம் மட்டுமல்ல; சேலம் மாவட்டம் மேட்டூரில் மால்கோ, கெம்பிளாஸ்ட் முதலான நாசகர இரசாயன ஆலைக் கழிவுகளால் இப்பகுதியிலுள்ள பெண்களுக்குக் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பிறக்கும் குழந்தைகள் ஆணா, பெண்ணா என்று பாலினம் கண்டறிய முடியாதபடி பிறக்கின்றன. மனித இனத்தின் கருவறைக்குள்ளேயே புகுந்து நாசப்படுத்தும் முதலாளித்துவத்தின் கோரமுகத்தை இன்னும் விரிவாக அம்பலப்படுத்த வேண்டும்.

**– புரட்சித்தூயன், தர்மபுரி.**

❍ நுழைவுத் தேர்வு பற்றிய தலையங்கக் கட்டுரையில், 1970-களில் நுழைவுத் தேர்வு முறையைப் புகுத்த கருணாநிதி முயற்சி செய்த போது, தந்தை பெரியார் அதை எதிர்த்தார் என்ற வரலாற்றுக் குறிப்பு மிக அவசியமானது. திராவிட பிழைப்புவாதக் கட்சிகளின் துரோகத்தைப் புரிந்து கொள்வதற்கு இது மிக முக்கியமானது. எம்.ஜி.ஆர். காலத்தில் உருவான சுயநிதிக் கல்லூரிகளின் கொள்ளைக்கு வித்திட்ட இந் நுழைவுத் தேர்வுமுறை, ஜெயலலிதா – ராமதாசு – வைகோ ஆகியோரின் கட்சிகள் மைய அரசில் பங்கேற்றபோதுதான் சட்டமாக்கப்பட்டுள்ள நிலையில், இன்று அவர்கள் நுழைவுத் தேர்வை எதிர்ப்பதாக நாடகமாடுவது, கடைந்தெடுத்த மோசடியேயாகும்.

**– செம்மலர் மா. நடராசன், அறந்தாங்கி.**

❍ ஏகாதிபத்தியக் கொள்ளையர்களுக்கு ஏழை நாடுகளின் உழைக்கும் மக்கள்தான் சாவுமணி அடிக்க முடியும் என்பதை பொலிவிய மக்களின் வீரம் நிரூபித்துக் காட்டுகிறது. அமெரிக்காவின் எச்சில் காசை வைத்து மனித உரிமை நாடகமாடும் மக்கள் கண்காணிப்பகம், அதனுடன் கூட்டு சேரும் சி.பி.எம். – இவர்களை உழைக்கும் மக்கள் இனம் கண்டு விரட்டியடிக்க வேண்டும்.

**– சாருவாகன், திருச்சி.**


## இப்பொழுது விற்பனையில்....

இந்திய அரசின் தேசிய நீர் கொள்கை, பொதுத்துறை – தனியார்துறை கூட்டு என்ற பெயரில், தண்ணீரைத் தனியார்மயப்படுத்துவதை நியாயப்படுத்துகிறது. இக்கொள்கையின்படி, தில்லி முதல் திருப்பூர் வரை, இந்தியாவின் பல்வேறு நகரங்களில் பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்குவது பன்னாட்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது. இது மட்டுமின்றி, ஆறுகளும், அணைகளும் கூடத் தனியார்மயமாக்கப்படுகின்றன.




நிலத்தடி நீரைப் பாதுகாக்க இலவச மின்சாரத்தை நிறுத்த வேண்டும் என மன்மோகன் சிங் பேசியிருப்பது; ஆற்றுப் பாசனத்திற்கு அநியாயக் கட்டணம் விதிக்கும் மகாராஷ்டிரா மாநில அரசின் சட்டம்; தமிழக அரசு கொண்டு வந்திருக்கும் பாசன வசதிகளை பயனீட்டாளர்களே பராமரிப்பது என்ற உலக வங்கியின் திட்டம் – இவையாவும் தண்ணீர் தனியார்மயத்தின் வெவ்வேறு முகங்கள் என்பதை நிறுவுகிறது, இந்நூல்.

தண்ணீர் வியாபாரமென்பது பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களை விற்பதற்குச் சமமானது; மனித குலத்துக்கு எதிரான பயங்கரவாதம்; மறுகாலனியாதிக்கத்தின் கோர வடிவம் எனவும் விளக்குகிறது, இந்நூல்.

**தண்ணீர்:**
**தாகத்திற்கா, இலாபத்திற்கா?**

**நன்கொடை ரூ. 5/-**

**ம.க.இ.க. - வி.வி.மு. - பு.மா.இ.மு. - பு.ஜ.தொ.மு. வெளியீடு**

**பிரதிகள் கிடைக்குமிடம்**

**இரா. சீனிவாசன், புதிய கலாச்சாரம், 18, முல்லை நகர் வணிக வளாகம்,**
**2-ஆவது நிழற்சாலை, அசோக்நகர், சென்னை – 600 083.**
✆: 044-2371 8706


Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
FOR INDIA UNDER NO.42648/85

Regn.No.TN/PMG(CCR)/621/03-05

www.padippakam.com

# விவசாயம் அழிகிறது இந்தியா 'ஒளிர்கிறது'!

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் விவசாயிகளின் நிலைமை பேயிடமிருந்து தப்பித்துப் பிசாசிடம் மாட்டிக் கொண்ட கதையாகிவிட்டது. கடந்த ஐந்தே மாதங்களில், மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள விதர்பா பகுதியில் மட்டும் 29 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போய் விட்டனர். அம்மாநிலத்தில் கடந்த ஒரே ஆண்டில் நடந்துள்ள விவசாயிகளின் தற்கொலைச் சாவு 400-ஐத் தாண்டிவிட்டது. ஆனாலும், இவர்களுள் பெரும்பாலோர் விவசாயிகளே கிடையாது என முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முயலுகிறது, அம்மாநிலத்தை ஆளும் காங்கிரசு கூட்டணி.

"அரசு வங்கி அல்லது கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கியிருக்க வேண்டும்; அவ்வங்கிகள் கடனைத் திருப்பி அடைக்கக் கோரி நோட்டீசு அனுப்பியிருக்க வேண்டும்; வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர் என்பதற்கு ஆதாரமாக ரேசன் கார்டு வைத்திருக்க வேண்டும்; தற்கொலை செய்து கொள்வதற்கு முன் கடிதம் எழுதி வைத்திருக்க வேண்டும்" - இப்படி ஏறத்தாழ 40 சிவப்பு நாடாத்தனமான விதிகளை உருவாக்கி, இந்த விதிகளுக்குள் பொருந்தினால்தான், அந்தச் சாவுகளைத் தற்கொலை என ஏற்றுக் கொள்ள முடியும் என மகாராஷ்டிர மாநில அரசு அறிவித்திருக்கிறது. இந்த விதிகளுக்குப் பொருந்தாத விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளை, இயற்கையாக ஏற்பட்ட மரணத்தை நட்ட ஈடு பெறுவதற்காகத் தற்கொலையாகக் காட்டும் நாடகம் எனக் கூறி, பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களை அவமானப் படுத்துகிறது, காங்கிரசு ஆட்சி.

இத்தற்கொலைச் சாவுகள் ஒருபுறமிருக்க, மகாராஷ்டிர மாநில விவசாயிகள், தங்களுக்குத் தேவைப்படும் பயிர்க் கடனில் 60% சதவீதக் கடனை, 5 சதவீத வட்டிக்கு கந்துவட்டிக் கும்பலிடம் பயிரை அடமானம் வைத்து வாங்கித் தான் விவசாயம் செய்கிறார்கள். இதனால், 2,300 ரூபாய்க்கு விற்க வேண்டிய ஒரு குவிண்டால் பருத்தியை, தனியார் மண்டி வியாபாரிகளிடம் 1,600 ரூபாய்க்கு விற்றுப் போண்டியாகிக் கொண்டிருக்கிறார்கள்.



வாங்கிய கடனை அடைக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்ட திகம்பர் அகோசேயின் குடும்பம். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப் போல, இக்குடும்பம் வறுமைக் கோட்டுக்கு மேல் வாழ்வதாகக் கூறி, நட்டஈடு கூடத் தர மறுத்து விட்டது, மகாராஷ்டிர மாநில அரசு.

இப்படி போண்டியாகி, நிலங்களை இழக்கும் சிறு / நடுத்தர விவசாயிகளின் எண்ணிக்கை இந்தியாவெங்கும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. 1987-88-இல் கிராம மக்கள் தொகையில் 35 சதவீதமாக இருந்த நிலமற்ற கூலி விவசாயிகளின் எண்ணிக்கை, 1999-2000 ஆண்டில் 41 சதவீதமாக அதிகரித்திருப்பது இதற்கு ஆதாரமாகக் காட்டப்படுகிறது.

தாராளமயத்தின் பின், விவசாயத்தின் மூலம் கிராம மக்களுக்குக் கிடைக்கும் வேலை வாய்ப்பு கொஞ்சம் கூட வளர்ச்சி அடையவில்லை என்பதோடு, மகாராஷ்டிரா, ஒரிசா, ராசஸ்தான், மேற்கு வங்கம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பட்டினிச் சாவுகளும் பரவலாக நடந்து வருகின்றன.

இந்திய விவசாயிகளின் அழிவிற்கும், இந்திய விவசாயமே மீள முடியாத நாசப் பாதையில் தள்ளப்படுவதற்கும் தனியார்மயம் - தாராளமயம்தான் காரணம் என்பதற்குப் புதிய ஆதாரங்கள் தேவையில்லை. ஆனாலும், ஆளும் கும்பலோ, ஒப்பந்த விவசாயம், ஏற்றுமதி பயிர்கள், பாசன வசதியைத் தனியாரிடம் ஒப்படைப்பது, அரசாங்கக் கொள்முதலைக் கைவிடுவது என விவசாயத்தில் தனியார்மயத்தை மேலும், மேலும் ஆழமாகப் புகுத்திக் கொண்டே போகிறது. பல கோடிக்கணக்கான விவசாயிகளின் அழிவில், இந்தியா ஒளிர்வதைவிட மோசடித்தனம் வேறெதுவும் இருக்க முடியுமா? ●

தண்ணீர் இன்றிப் பயிர் வாடிப் போய் விட்டதால், கடனை அடைக்க முடியுமா என நிலைகுலைந்து போன பீகார் மாநிலம் - மோதிஹரி கிராம விவசாயி.



படிப்பகம்